275

# விவேக போதினி.

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"——திருவள்ளுவர்

தொகுதி 1 } 1909-ஹ மார்ச்சு மீ { பகுதி 9

## வேதங்களின் ஸ்வரூபம்

THE VEDAS—THEIR NATURE

ஒவ்வொரு மதத்திலும், பின்பற்றுவோர்கள் யாவரும் மிகச் சிறந்ததென கொண்டாடும்படியான புஸ்தகம் ஒன்றுண்டு. இதில் அடங்கியிருக்கும் உண்மைகள் கடவுளால் நேரிடவாவது, அவரால் எடுக்கப்பட்ட மானிட அவதாரங்களாலாவது, அவரால் ஏவப்பட்ட மஹான்களாலாவது, வெளியிடப்பட்டவைகளாகவேயிருக்கவேண்டும் என்று நம்புவதற்குத்தகுந்த ஆதாரங்கள் உண்டு. இவ்வளவு சிறந்த உண்மைகள், மானிடரில் சிறந்தவர்களால் செய்யப்பட்ட மேன்மையான கிரந்தங்களில்கூட, காணப்படவில்லை. இத்தன்மையுடைய புத்தகம் ஒவ்வொரு மதஸ்தர் இடத்திலும் இருப்பதுபோல் ஆரியர்களாகிய நமக்கும் இருக்கிறது. துரைத்தனத்து வித்வான்களில் சிலர் நமது சிறந்த புஸ்தகமானது உலகத்திலுள்ள மதவிஷயமான நூல்களில் மிகச் சிறந்ததென அபிப்பிராயப் படுகிறார்கள். அவர்களில் சிலர் ஆரியரது மதநூலே முதன்மையான நூல், மற்றவைகளெல்லாம் இவைகளைவிட தாழ்ந்தனவென்று ஸாதிக்கிறார்கள். நமது மதவிஷய நூல்களை சிறந்ததெனக்கொண்டு அவைகளையே பின்பற்றும் ஆற்றலுடையரா யிருந்த ஷோபனர் என்ற ஜெர்மன் தத்துவசாஸ்திரி, உபநிஷத்துக்கள் தமக்கு உயிரோடிருக்கும்பொழுது ஆனந்தமளித்தனவென்றும், இறந்தபின்பும் தமக்கு ஆனந்தமளிக்குமென்றும், வாய்விட்டுத் தெளிவாய் தமது அபிப்பிராயத்தை யாவரும் அறியும்படிசெய்து, நமது வேதங்களின் காம்பீர்யத்தைக் காட்டி இருக்கிறார்.

நாம் நமது வேதங்களை அனாதி என்றும் நம்புகிறோம். இதற்குத் தகுந்த காரணங்கள் பின்னர் கூறுவோம். மேனாட்டார் தம்மால் இயன்றமட்டும் முயற்சித்தும், வேதங்கள் உண்டான காலத்தை நிர்ணயிக்க முடியாமல் தத்தளிக்கிறார்கள். இப்படி நிர்ணயிக்கக்கூடாத காலம்முதல், இதுவரையில் இராஜாங்க வேறுபாடுகளால் எவ்வளவோ குழப்பங்கள் உண்டாக, மதத்துவேஷம், முரட்டுத்தனம், கொடுங்கோன்மை,விதண்டாவாதம்முதலியவைகள் நமது வேதங்களை அழிக்க யத்தனித்து, அவைகளில் நமக்கு இருந்த நம்பிக்கையை போக்கத் தலைப்பட்டன. இக்கொடுமையான காலங்களில் நம்மை ஆளவந்த அரசர்களின் அமானுஷியகரம் என்னத்தகுந்த செயல்களாலும், மதத்துவேஷிகளது முயற்சிகளாலும்

பழையன யாவற்றையும் களைந்து புதியவைகளையே நிலைநிறுத்த முயலும் கண்மூடிகளது விடாமுயற்சிகளாலும், புதிய பிரகிருதி சாஸ்திரங்களது விருத்தியாலும், நமது வேதத்திலுள்ள நம்பிக்கை சிலருக்குக்குறைந்தபோதிலும், நம்முள் படித்தவர் படியாதவர் பலருக்கும், வேதங்களில் அடங்கியுள்ளதும், சாந்தம் உண்டாகும்படி மோக்ஷமளிக்கும் திறமை வாய்ந்ததுமான, உண்மைகளில் நம்பிக்கை குறையாது வரவர அதிகரித்துக்கொண்டே வருகின்றது. ஆகையால் ஆகாயத்தில் எவ்வளவு காற்று மழைகள் அடித்துக்கொண் டிருந்தபோதிலும் சூரியன் எப்படித் தனது கிரணங்களால் உலகைக் காத்து வருகிறானோ, அதுபோல் எவ்வளவு குழப்பங்கள் உலகில் ஏற்பட்டபோதிலும் நாஸ்திகம், சார்வாகம் என்ற பிணிகளிலிருந்து எக்காலத்திலும் நம்மை காக்கவல்ல மருந்துகள் இவ்வேதங்களே என்பது நன்றாய்க் கற்றுத்தேர்ந்து மனந்தெளிந்த மஹான்களது அபிப்பிராயம்.

இப்பொழுது பிரகிருதி சாஸ்திரங்களும் புதிய நாகரீகங்களும் உற்பத்தியாய் ஓங்கிவளரும் மேனாட்டிலும் நமது மஹரிஷிகளது கொள்கைகள் 'பறையறைந்தாங்கோடி பறக்கின்றன' என்று நமக்கு சமாசாரம் வந்து எட்டுகின்றது. இதுவும் ஆச்சரியப்படத்தக்க ஒரு விஷயமன்று. இதுவரையில் தர்க்கசாஸ்திர உண்மைகள் பிரகிருதி சாஸ்திரங்கள் முதலியவைகளின் ஸஹாயமின்றி, அந்நாட்டு மனிதரது புத்தியானது யதார்த்தவாதமின்மையால் உண்டாகும் மூடநம்பிக்கை முதலியவைகளால் மயங்கி நிலைகுலைந்து கிடந்தது. இப்பொழுது தர்க்கம் பிரகிருதி சாஸ்திரம் முதலியவைகள் விருத்தியாகி, அந்த மயக்கத்தை ஒழித்தமையால் நமது மஹரிஷிகளது கொள்கைகள் அவர்களுக்கு உண்மை என்று தோன்றுகின்றன. இது நியாயந்தானே. மேலும் நமது தத்துவசாஸ்திரம், மதக்கொள்கை முதலியவைகள் தொன்றுதொட்டு மாறாமலும் அழியாமலும் சுத்தமாய் இக்காலம்வரையில் நிலைத்தும் வந்திருக்கின்றன. இச்சிறந்த குணத்தால்தான் நமது வேதத்திற்கு இதர மதங்களது சிறந்த புத்தகங்களுக்கு இல்லாத மேன்மை உண்டாயிற்று. இதனால்தான் இது நமக்கு இதுவரையிலும் தெரியாத தேசங்களிலும் ஜயபேரியடித்துக்கொண்டு கௌரவப்பட்டுவருகிறது. இதர மதங்களில் சித் ஜடம், ஆத்மானாத்மா இவைகளுக்குள்ள ஸம்பந்தத்தைப்பற்றிய விஷயங்களை அவ்வம்மத பிரவர்த்தகர்கள் தவறவிட்டபடியால் அவ்வம்மதங்களில் உண்மைகள் நிலைகுலைந்து, இப்பொழுது ஒரே மூடநம்பிக்கைக்கும் ஆதாரமற்ற ஸித்தாந்தவசனங்களுக்கும் அவைகள் இடமாகமாறிவிட்டன. இதனால் மற்றையமதங்களைத் தூஷிக்க நாம் வரவில்லை. ஆதியில் அவைகளை ஸ்தாபித்தவர்கள் ஒன்றையும் விடாது, அக்காலத்திற்கு அவசியமான சில விஷயங்களை வெளிப்படையாகவும் மற்றவைகளை குறிப்பாகவும், காட்டிப்போனார்கள். ஆகையால் அம்மதங்களில் ஒரு குறையுமில்லை, ஆனால் அதைப் பின்பற்றிய முக்கிய சிஷ்யர்கள் வரவர வெளிப்படையாய் வற்புறுத்திய விஷயங்களைக் கைக்கொண்டு மற்றவைகளை கவனியாது விட்டுவிட்டார்கள். இவ்வஜாக்கிரதையாலே மற்ற விஷயங்கள் அம்மதங்களில் இல்லை என்று சொல்லும்படியான நிலைக்கு அம்மதங்கள் வந்துவிட்டன. இத்தன்மையான விஷயம் சித் ஜட ஆத்மானாத்ம ஸம்பந்தம். இது மற்றைய மதங்களில் தெளிவாய் இல்லாமையால், அம்மதங்களைப் பின்பற்றுவோர்க்கு இவ்விஷயமே தெரியாது. நமது வேதங்களுடைய ஸ்திதியோ இப்படியல்ல. வேதங்களிலுள்ள வாக்கியங்களை அவைகள் உண்டான காலங்களில் இருந்தபடியே, நமது பரதகண்டத்திற்கு தக்க வழிகளால், பக்ஷபாதிகள் தமக்கு ஏற்றபடி மாற்ற இடங்கொடாது, நம்மவர்கள் காப்பாற்றி வைத்திருக்கிறார்கள். ஆகையால் வேதங்களில் சொல்லப்பட்ட விஷயங்கள் யாவும் முன் உண்டானபடியே இருப்பதினால் அவைகளில் ஆத்

மானாத்மாக்களுக்கு உள்ள ஸம்பந்தம் நன்றாய்க் காணப்படுகின்றது. மேனாட்டார்கள் பிரகிருதி சாஸ்திரங்கள் மூலமாய் ஆத்மானாத்ம விஷயங்களை ஒருவாறு அறிந்து, அதன்பின் அதற்கும் ஆத்மாவுக்கும் உள்ள ஸம்பந்தம் அறியாமல் மயங்குகின்றனர். இவ்வாறு மயங்கும் மேனாட்டவர்கள் நமது வேதங்களில் அடங்கிய ஆத்மானாத்ம ஸம்பந்தத்தை பார்ப்பார்களேயானால், உடனே அதை மிக்க ஆவலோடு கைக்கொண்டு அரிய பெரிய விஷயங்களை அறிந்துகொண்டு, விருத்தியடைவார்கள். இவ்வெண்ணத்தினாலேதான் நமது வேதங்களை மேனாட்டவர்கள் மனதார அங்கீகரித்து, அவைகள் தமது மனதை விரியச்செய்து, சாந்தியை அளிக்கும் குணமுடைய நூல்கள், என்று கௌரவிக்கின்றனர்.

மேனாட்டவர்களது சில அபிப்பிராயங்களை வாசித்து உணர்ந்த நம் நாட்டவர் சிலர் பின்வருமாறு நாம் சொன்ன விஷயங்களை சந்தேகிக்கலாம். "நல்லவை அல்லது கெட்டவைகளாயினும் நமது விஷயம் என்றால் நன்றெனக்கொண்டாடும் கண்மூடித் தனத்தால் நமது வேதங்களை ஏன் கொண்டாடவேண்டும்? உபநிஷத்துக்கள் என்று சொல்லப்பட்ட வேதாந்தங்கள் வேண்டுமானால் சிறந்தவைகளாயிருக்கலாம், ஆனால் வேதங்களின் முன்பாகங்கள் சிறுபிள்ளைத்தனமான விஷயங்களை அடக்கியுள்ளன. இவைகளை மாக்ஸ்-முல்லர், 'குழந்தை பருவத்திலுள்ள ஜனங்களது மழலைச்சொற்கள்' என்று வருணித்திருக்கிறார். கூடியவரையில் நமது சாஸ்திரங்களை நல்ல மனத்தோடு ஆராயும் திறமையுடைய ஆ. ஆ. மேக்டனல் என்பவர் பிராம்மணங்களைப் பற்றி 'வேறே எந்த நாட்டார் சாஸ்திரங்களிலும் காணப்படாத பௌரோஹித்திய விஷயங்களும் நிஸ்ஸாரமும் கல்விமதமும் நிறைந்ததுமான தர்க்கவாதங்களும் யுக்திக்கு விரோதமான மனோராஜ்ய விசேஷங்களுமே இதில் நிறைந்துள்ளன' என்று தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இவ்விதமான அபிப்பிராயங்களுக்கு விரோதமாய் எப்படி நாம் நமது வேதங்கள் ஸகல மதங்களது சிறந்த நூல்களைவிட மேல் என்று கொண்டாடலாம்?" இம்மாதிரியான அபிப்பிராயம் நமது வேதங்கள் சாஸ்திரங்கள் முதலியவைகளின் நோக்கத்தை நன்கு உணர்ந்த மேனாட்டவர்கள் கொண்டிருக்கிறார்கள் என்று நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். நமது வேதங்களில் அடங்கிய அரிய விஷயங்களை அறிந்து அதன்படி ஒழுகி உய்யவேண்டும் என்று முயலும் மஹான்களுக்கும், வேதங்களில் காணப்படும் பாஷாவிசேஷம் அர்த்தவிசேஷம் முதலியவைகளிலிருந்து அவைகள் உண்டான காலநிர்ணயம், அக்காலங்களின் விசேஷம், முதலியவைகளை ஒருவாறு ஊகித்து அறியவேண்டுமென்று முயலும் வித்வான்களுக்கும், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்தியாசம் உண்டு. ஸத்குருலாபம், உபதேசப்பேறு, முதலியவைகளால் நல்ல நிலையை அடைய முயலும் முன்னவர்களுக்கு எவ்வளவு வேதங்களின் உட்பொருள் விளங்குமோ, அவ்வளவு கேவலம் வித்வத் ஸம்பத்திலும் பழைய பொருளை ஆராயும் விஷயங்களிலும் மாத்திரம் மனம் செல்லும் புல்லரிவாளர்கு விளங்காது. இது போலவே கைவல்லிய நூலாசிரியர் வேதங்கள்

'மனைபறங்கள் செப்மகங்கள் செய்நன்றென்று
மலர்ந்த வாசகம் சொல்லும்:
நினைவு வேறுகாண் ஸ்வர்க்க காமிகளந்த
நிர்ணயம் தெரியாரே'

என்று சொல்லியிருக்கிறார். மற்றைய மதங்களது சிறந்த நூல்களைப்போல நமது வேதங்களுக்கும் சிறந்த கதைகள் மூலமாயும், அழகான நடைவிசேஷமூலமாயும், நமது மனதைச் சந்தோஷப்படுத்த வேண்டுமென்ற கருத்துக் கிடையாது. ஆனால் இவ்விசேஷங்களும் வேதங்களில் மந்திரபாகங்களில் காணப்படுவனபோல வேறு எந்த நூல்களிலும் இல்லையென்றே, சொல்லலாம். விசேஷ வர்ணனை முதலியவைகளில்லாமல் உண்மையுரைத்தலைப் பிரதானமாகக்

கொண்ட நமது வேதங்களில் பிராம்மணபாகங்கள் எவ்வாறு இல்லௌகிக விஷயங்களில் மனஞ்செல்லும் தன்மையை உடையவர்களை திருப்திபடுத்தும்? வேதங்களே சிறந்த பிரமாணமெனக் கொண்டாடும் நாமும் உபநிஷத்துக்களையே மிகச் சிறந்தனவாகக்கொள்ளுகிறோமே ஒழிய கர்மகாண்ட பாகத்தை அவ்வளவு சிறந்ததாகக் கொள்வதில்லை. கர்மகாண்ட பாகங்களை அபர (தாழ்ந்த) வித்தையென்றும் மற்ற பாகத்தை பர (சிறந்த) வித்தையென்றும் நாம் எண்ணுகிறோம். அபரவித்தையானது கர்மானுஷ்டான முதலியவைகளால் சித்தசுத்தி உண்டாக்கி பரவித்தையை அறியத்தகுந்த அதிகாரம் நமக்கு உண்டாகும்படி செய்கிறது. ஆகையால் வேதங்களில் காணப்படும் கர்மானுஷ்டானங்கள் அவைகளின் நோக்கம் முதலியவைகளை நன்கு உணராதவர்களே முன்னெடுத்து காட்டியவாறு நமது வேதங்களை அகாரணமாய் குற்றம் கூறுவார்கள். இவர்கள் இவ்வாறு குற்றம் கூறுவதற்குத் தகுந்த ஆதாரம் இல்லை என்பதை பின்னர் நன்கு விளக்குவோம்.

நமது ஸனாதனதர்மத்திற்கு சுருதி, ஸ்மிருதி, புராணங்கள் ஆகிய மூன்றுமே பிரஸ்தானத்திரயங்கள். இம்மூன்றிற்குள் சுருதிகளே முக்கிய பிரமாணங்கள். ஸ்மிருதிகளும் புராணங்களும் வேதரகஸ்யங்களை தெளிவாய் யாவரும் அறியக்காட்டவந்த சிறந்தநூல்கள், ஆகையால் இவைகள் வேதங்களுக்குக் கீழ்ப்பட்ட பிரமாணங்கள். சுருதிகளில் அடங்கிய அரிய விஷயங்களை ஒழுங்குபடுத்தி விதி நிஷேத வாக்கியங்கள் ரூபமாய் ஸ்மிருதிகள் வெளியிடுகின்றன. புராணங்களோ யாவரும் மிகுந்த ஆவலோடும் விருப்பத்தோடும் கேட்டு எளிதில் அறியும்படி வேதரகஸ்யங்களை விசித்திர கதைகள் மஹான்களது சரித்திரங்கள் ஆகிய இவைகளின் மூலமாய் வெளியிடுகின்றன. வேதங்கள் தலைமுறை தலைமுறையாய்க் கேட்டு அத்தியயனம்செய்தல் மூலமாய் இக்காலம்வரையில் காப்பாற்றி வரப்பெற்றமையால் அவைகளுக்கு சுருதி என்று பெயர் வந்தது. வேதங்கள் கடவுளது வாக்கு என்ற பூரண நம்பிக்கையும் பக்தியும் நம்முன்னோருக்கு இருந்தபடியால், மதபக்ஷபாதிகள் அவைகளை மாற்ற இடங்கொடுக்காமல், வெகு ஜாக்கிரதையாய்ப் பாதுகாத்து வந்தனர். மேலும் வேதங்களில், அதிலடங்கிய ஒவ்வொரு பதங்களுக்கும் வியாகரண விதிகளால், ஏற்பட்ட ஸ்வரங்களுக்கு மாறுபாடுவராது, அவைகளை அத்தியயனம் செய்யவேண்டுமென்று ஒரு கட்டுப்பாடு இருந்தது. இதனாலேயும் வேதவாக்கியங்கள் சிறிதும் மாறாது இக்காலம் வரையில் நிலையாயிருக்கின்றன. இவ்வாறு ஸ்வரங்கள் தவறாது வேதாத்தியயனம் செய்வதால் நமக்கு என்ன விசேஷ சுத்தம் ஏற்படும் என்பதை பின்னர் விஸ்தரிப்போம். ஆகவே வேதங்கள் ஒவ்வொருவரும் தமது குருவினிடமிருந்து கேட்டு அத்தியயனம் செய்து கற்றுக்கொள்ளத் தக்கனவாய் இருந்ததால், அவைகளுக்கு சுருதி என்று பெயர் கிடைத்தது. (சுரு என்ற தாதுவிற்கு கேட்டல் என்பது பொருள்.)

சுருதி என்பதற்கு ஸாதாரணமாய் வேதம் என்று ஒரு பெயரும் உண்டு. இது ஞானம் என்று பொருள்படும். வித் என்ற தாதுவினின்று உண்டான ஒரு பெயர். இக்காலத்தில் பிருகிருதி சாஸ்திரம் லௌகிக அனாத்ம விஷயங்களை அறிய ஜனங்களுக்கு எப்படி இன்றியமையாததோ அவ்வாறு ஆத்ம விஷயங்களை அறிய வேதங்களும் இன்றியமையாதன. ஆகையால் வேதங்கள் ஆத்மசாஸ்திரங்கள். இம்மை மறுமை முதலியவைகளில் மனிதன் ஸுகம் பெற்று ஆனந்திக்க வேண்டுமானால் ஆத்ம சாஸ்திரங்களும் அனாத்ம சாஸ்திரங்களும் அத்தியாவசியமே. ஆகையால் நம்மவர் நல்ல நிலையை அடைந்து ஸுகிக்கவேண்டுமேயானால் ஆத்ம விஷயங்களில் நமக்கு முன்னிருந்த பிரபாவங்களை வெளிப்படுத்தி, அவைகள் இக்காலத்தில் விருத்தியடைந்திருக்கும் அனாத்ம சாஸ்

திரங்களுக்கு முரண் அல்ல என்று தெரிந்து கொள்ளவேண்டியது அத்தியாவசியம்.

மனிதனுக்கு எவ்வளவு தெரியவேண்டுமோ, எவ்வளவு அவசியமோ, அவ்வளவும் வேதத்தில் இருக்கின்றன, வேதத்தில் இல்லாதது எங்குமில்லையென்று ஒருவசனம் நம்முள் வழங்கிவருகிறது. இதனால் இப்பொழுது விசித்திரமாய்க் காணப்படும் தந்தி, நீராவியந்திரம் முதலியவைகளைப்பற்றிய விஷயங்களும் வேதங்களில் காணப்படும் என்று எண்ணிவிடக்கூடாது. இவைகள் யாவும் மனிதனது லௌகிக ஸுகத்தைக் கொடுக்கும் அனாத்ம விஷயங்களாதலின், ஆத்ம விஷயங்களைப்பற்றியும் மோக்ஷ ஸுகத்தைப்பற்றியும் சொல்லும் தன்மையுடைய வேதங்களில் இவைகள் காணப்படுமென்பது யுக்திக்குப் பொருந்தாது. நமது இந்திரியங்களின் வழியாக முன்சொன்ன விஷயங்களில் ஞானம் உண்டாக்கலாம். இப்படி உண்டாகும் ஞானமும், அதைச் காரிய காரண ஸம்பந்தமாய்த் தொடுத்தலுமே ஸ்தூலப் பிரபஞ்சத்தைப்பற்றிய ஞானத்தின் ஸ்வரூபம். உலகத்தில் காணப்படும் விஷயங்களில் புதிதாயுள்ள கற்பனைகளும் யந்திரவிசேஷங்களும் முன்சொல்லிய தொடுக்கும் சக்தியாகிய கற்பனாசக்தியுள்ள மனிதர்களால் உண்டாக்கப்பட்டன. ஆகையால் பிரகிருதி சாஸ்திரங்கள், அவைகளில் புதிதாய் கண்டுபிடிக்கும் விஷயங்கள், இவைகள் யாவும் அனாத்ம விஷயங்களாதலின் இவைகளுக்கு வேதங்கள்போன்ற சப்தப்ரமாணங்கள் வேண்டியதில்லை. இந்திரியமூலமாயுள்ள பிரத்தியக்ஷ அநுமானப் பிரமாணங்களே போதும். இக்கருத்தை ஒருவாறு உள்ளடக்கியே வேதங்களில் அடங்கியிருக்கும் விஷயங்களின் ஸ்வபாவத்தை கைவல்லிய நவநீத நூலாசிரியர் பின்வருமாறு கூறுகிறார்.

"போக மாருயிர் கண்டதைப் புசிப்பதும்
புணர்வது மியல்பே காண்
ஆகமங்களும் ஸ்வபாவத்தை விதிக்குமோ
வத்தனை தெரியாதோ
காகமே கருத்திடு நெருப்பே
சுடு கசந்திடு வெம்பே நீ
வேகவாயுவே யசையென ஒருவரும்
விதித்திடல் வேண்டாவே."

ஆனால் இவ்வுலகத்தில் உள்ள விஷயங்களைக் கடந்து அப்பாற்பட்ட ஆத்மவிஷயங்களோ இத்தன்மையவல்ல, இவ்விஷயங்கள் இந்திரியங்களால் அறியத்தக்கவைகளல்ல. அனாத்ம விஷயங்களை எவ்வளவுதான் ஐயந்திரிபற உணர்ந்தபோதிலும் இந்திரியங்களால் உணரமுடியாத ஆத்மவிஷய ஞானம் கொஞ்சமேனும் உண்டாகமாட்டாது. எப்படிப்பட்ட மஹான்களும் மோக்ஷ நிலையை கேவலம் பிரத்தியக்ஷப் பிரமாணத்தால் மாத்திரம் ஸ்தாபிக்க முயலவில்லை. ஆகையால் ஒருவித நூல்களாலும் செய்யமுடியாத இந்தக் காரியத்தை வேதங்கள் செய்யப் பிரவர்த்தித்தன. கேவலம் இந்திரியங்களால் மாத்திரம் அறியக்கூடிய விஷயங்களை இவைகள் சொல்லவரவில்லை. அனாத்ம விஷயங்கள் அநித்தியம்: ஆத்ம விஷயங்கள் நித்யம். ஆத்மவிஷயங்களை வெளியிடும் சிறப்பினால் வேதங்கள் மனிதன் அறியவேண்டிய விஷயங்கள் யாவும் அடக்கியுள்ளனவென்று சொல்லுகிறோம். சித்ஜடம் முதலியவைகளின் ஸ்வரூபத்தைப்பற்றிப் பூர்ணமாய் வேதங்களில் சொல்லியிருப்பதால் பிரபஞ்ச வைசித்திரியத்திற்குத் தகுந்த காரணங்களையும், மோக்ஷமடைய மனிதன் இவ்வுலகில் நடந்துகொள்ளவேண்டிய மாதிரிகளையும், வேதங்கள் அடக்கியுள்ளன. ஆதலால்தான் வேதங்களில் இல்லாத விஷயங்கள் வேறு எங்குமில்லையென்று சொல்லி இருக்கிறது.

வேதங்களில் தாழ்ந்தனவாகிய கர்மகாண்டங்களின் நோக்கத்தைக் கைவல்லிய நூலாசிரியர் பின்வரும் பாக்களால் நன்கு எடுத்துக் காட்டி இருக்கிறார்.

“கள்ளு மூனும் நீ விரும்பினால் மகங்கள்
செய் காமத்தின் மனதானால்
கொள்ளும் பெண்ணொடு கலவிசெய்யெனிலிவன்
குறையெலாந் தொடானென்றே
தள்ளும் வேதத்தின் ஸம்மதம் ஸகலமும்
தவிர்வதே கருத்தாகும்
விள்ளுமிவ்விதி யென்னெனிற்பூருவ
நியமமாம் விதியன்றே.

மது விறைச்சிகள் உண் என்ற சுருதி
பின்மணந்து பாரெனல் பாராய
மிதுனவிச்சையும் புத்திரோற்பத்தியால்
விரும்பென்ற விதிபாராய
இதையும் விட்டொழி யதியிஷ்டிக
வன்னிக்கிகழ்ச்சி யற்றதும் பராய்
அதை அறிந்து கர்மங்கள் ஆசைக
ளொழிந்தானந்த மடைவாயே.”

ஏ. எஸ். கஸ்தூரிரங்கன். B.A. L.T.

---

ஹிமாசல அவதூதாள்:—நான்கு துணிச்சலான பிரயாணிகள் ஹிமாலயத்தில் அதிக உந்நதமாயும் அதி குளிர்ச்சியாயும் உள்ள விடம் சென்று பார்க்கையில் ஓர் கல் ஆசனத்தின்மேல் சாய்ந்துகொண்டு ஓர் வயது முதிர்ந்த பெரியவர் இருப்பதை மங்கிக்கொண்டுவந்த நக்ஷத்திர வெளிச்சத்தில் கண்டார்கள். இவரது நீண்டு வெளுத்த சிகையிலும் தாடிமயிரிலும் அப்பொழுதே புதிதாக விழுந்த பனிக்கட்டிகள் அமர்ந்திருந்தன. இவர் இருந்த கல் பனிக்கட்டியைவிட அதிகக் குளிர்ச்சியாக விருந்தது அசையாது அந்த அற்புதக்காட்சியின் மத்தியில் இவர் பகவந்நிஷ்டையில் மூழ்கி இருந்தமையால் பிரயாணிகள் வந்தது இவருக்குத் தெரியவில்லை. இவர் நம்மைப்போலவே மூச்சு விட்டுக்கொண்டிருந்தனர், ஆனால் பிரயாணிகளுக்கு இவருடம் இரிந்த மதிப்பால் இவரை அவர்கள் தொட்டுக்கூடப் பார்க்கவில்லை. அரைமணிநேரம் அவர்கள் நின்று பார்த்தார்கள் இவர் மூடினகண்ணைத் திறக்கவேயில்லை. இந்தப் பெரியவரது அருகாமையில் வயதிற் சிறியவர் ஒருவர் பூமியில் நன்றாகப் படுத்துக்கொண்டும் மூன்றாவது ஒருவர் தமது கைகளையும் கால்களையும் ஆதாரமாகக்கொண்டு மல்லாந்து சாய்ந்துகொண்டும் காணப்பட்டார்கள். இம்மஹான்களுக்கு போர்த்துக்கொள்ள ஓர் வித வஸ்திரமும் இல்லை. இப்படி இருப்பினும் அநேக வித கம்பளிச்சட்டை முதலியவைகளுள் ஊடுருவிச்சென்றி பிரயாணிகளது அஸ்திவரையில் ஏக சீதளமாக செய்துகொண்டிருந்த அந்த கோரமான குளிரில் அந்த மஹான்கள் வெகு அலட்சியமாகத் தமது காலத்தை பகவத்விஷயத்தில் கழித்துவந்தனர்.

# மேன்மை அடையும் வழி

## THE PATH TO PROSPERITY

---

ஒருவன் தாழ்ந்த நிலைமையி லிருந்து மேலான பதவிக்கு வருவதையும் மற்றொருவன் மேலான ஸ்திதியிலிருந்து தாழ்ந்தபதவிக்கு வருவதையும் நாம் பார்க்கிறோம். இவ்விருவருடைய முயற்சிகளை நாம் நன்றாகக் கவனிப்போமானால் முற்கூறியவன் மேலானபதவியை அடைந்ததற்கு அவனிடம் உயர்ந்த காரணங்களிருப்பதை நாம் நிச்சயமாகக் காணலாம். அவ்வாறே மேலானபதவியி லிருந்தவன் தாழ்ந்த பதவிக்கு வந்ததற்கு அவனிடம் அவன்தொட்ட பொன்னெல்லாம் கரியாகப் போகும்படியான சிலகாரணங்க ளிருப்பதையும் நாம் காண்போம். இன்னும் சிலர் இவ்விரு இனத்தார்களுள் உழன்றவர்களாக ஒருவித ஸித்தாந்தமுமில்லாதவர்போல புலப்படுவர். நாம் முன்னுக்கு வரவேண்டின் நாம் எந்தநிலைமையை அடைய வேண்டுகின்றோமோ அதையே முக்கிய நோக்கமாய் நாம் வைத்துக்கொள்ள வேண்டும். அதுதான் பெரும்பாலும் எல்லாவித் ஸித்திகளுக்கும் காரணமாகும். இந்நோக்கத்தைச் சில அர்த்தவாதிகள் மூவகையாகப் பிரிப்பார்கள் :—மேலானநோக்கம், கீழானநோக்கம், நோக்கமின்மை. மேலான நோக்கம் வைப்பதே நலம். முடவன்கொம்புத்தேனுக்கு ஆசைப்படுவது நியாயமா என்று சிலர் அவ்வித மேலானநோக்கக்காரரைப் பார்த்துப் பரிகசிப்பார்கள். அது நமது இயற்கையான குணம். அதனால்தான் நாம் இவ்வித தாழ்ந்த நிலைமையிலிருக்கிறோம். எப்பொழுதும் மேலானநோக்கமே ஸித்திக்குக் காரணமென்பது ஆங்கிலேயர், அமெரிக்கர் முதலாயினோர் கொள்கை. மேல்நோக்கத்துடன் மனவுறுதி எவனிடமிருக்கின்றதோ அவனைக்

கண்டால் இவன் தொட்டகாரியம் நடுங்கும். மார்க்கண்டேயரது உறுதியையும் மனநிலைமையையும் கண்டு யமனே நடுங்கவில்லையா? அவர் தவத்துக்குச் சென்றபொழுது அவரைக் கண்டு சிரித்த தபஸிகள் அவர் காரியஸித்தியடைந்ததும் அவரை மெச்சவில்லையா? இது புராணம், நமக்கு வேண்டாம், என்றாலோ மாதவராவ், முத்துசாமி ஐயர், சேஷாத்ரிஐயர், சேஷையசாஸ்திரி இவர்கள் முன்னுக்குவந்ததை நமது நாட்டார் கவனிப்பார்களேயானால் இவர்களில் ஒவ்வொருவரும்தாங்களிருந்த கீழான ஸ்திதியிலிருந்தபடியே ஒருநாளில்லாவிட்டால் ஒருநாள் மேலானஸ்திதிக்கு அகத்தியம் வந்தே தீரவேண்டுமென்ற மனவுறுதியுடன் முயன்று மேல்பதவிக்கு வந்தவர் என்பதை நாம் கொள்ளுவோம். ஆகையால் மேலானநோக்கம் வைத்தவனுக்கே இவ்வுலகமல்லாது கீழ்நோக்கம் கொண்டவனுக்கு இவ்வுலகம் கிடையாது என்பது திண்ணம். கீழ்நோக்கம் கொண்டவன் எப்பொழுதும் அதனையே ஊன்றுகோலாகக்கொண்டு ஈசன் முடியிலிருந்து விழுந்த தாழம்பூவைப்போல பலயுகங்கள் கீழ்நோக்கிப் போய்க்கொண்டேயிருக்கவேண்டும். இவ்வண்ணமான மேல்நோக்கம் கொள்ளும் காலம் எப்பொழுது? மார்க்கண்டேயர் எப்பொழுது கொண்டார்? நல்ல பாலியமான வயதில் நல்லூக்கமும் உற்சாகமும் ஒருவனிடமிருக்கும். இளம்பிராயத்தில் இவ்வித மேல்நோக்கமும் பிடிவாதமும் அவனிடம் உத்திக்கவேண்டும். "இளங்கன்று பயமறியாது" என்ற பழமொழி போல் நாம் குழந்தைகளாகவிருக்கும் காலத்தில் செய்தொழில் தெரியாமல், கவலையேயில்லாமல், சோம்பேறிகளாய் முயற்சியற்றுச் சில காலம் அலைந்து நிற்கலாம். தக்கவயது அதாவது 16, 17-வயது வந்ததும் துள்ளும் மனத்தை நாம் கைப்பற்றி நமது வசத்தில் நிறுத்தி நமது நோக்கம் இன்னதென்பதை நம்முன் வைத்து அதன் மேலேயே எப்பொழுதும் கண்ணோக்கமாயிருக்கவேண்டும். பல பெயர்கள் இவ்வாறான மேல்நோக்கங்கொண்டு விடுகிறார்கள். ஆனால் பிடிவாதக்காரர்கள் மட்டும் வெற்றியடைவார்கள், மற்றவர்கள் மிதப்பார்கள்; ஸம்ஸார ஸாகரம் என்ற இவ்வுலகத்தில் தைரியமாய் நீந்திக் கரையைக் காணப்பட்டவர்கள் சிலர். அவர்களே முன்னுக்கு வருவார்கள், மற்றவர்கள் இக்காலம் மிதந்து நீந்திக் கரையேற வகை தெரியாமல் ஆழ்கடலில் அமிழ்ந்துவிடுவார்கள். இவ்வாறு அதிகமாய் ஆழ்ந்துவிடும் ஆபத்து யாருக்கு அதிகம் என்றால் பெரிய வம்சத்தில் பிறந்த இளைஞர்களுக்கு. (அவர்களை நாம் இகழ்ந்து பேசுவதாக ஒருபொழுதும் எண்ணக்கூடாது). அவர்கள் பூவில்பிறந்து பூவில் வளர்ந்து பூவில் உலாவுகின்றவர்களாய்ச் சிலவேளைகளிலிருக்கலாம். ஆகையால் அவர்களிடம் முயற்சி என்பது அதிகமாய் இல்லாமலிருக்கும். அதனுடன் சில வேளைகளில் சோம்பலுமிருக்கலாம். சோம்பலின்றி முயற்சியுள்ளவர்களாய் மனத்தைக் கைப்பற்றி ஊக்கத்துடன் செய்தொழிலிற் பலதனிகர்களுடைய குழந்தைகள் 16 17-வயதில் வெகு புத்திமான்களாக மேல்நோக்கத்துடன் இக்காலத்தில் கிளம்புகின்றார்கள். அவர்களைப்பற்றி நாம் ஒருவித குற்றமும் சொல்லமுடியாது. பொதுவாய் ஸ்ரீமான்களுடைய குழந்தைகள் உலகக் கடலில் நீந்த முடியாமல் சிற்சில சமயங்களில் ஆழ்ந்துவிடலாம் என்று மட்டும் சொன்னபடி அவ்வாறு ஆழ்ந்துவிடாமலிருக்கச் சிறுவயதில் கஷ்டத்தை ஒரு முக்கியமான ஸாதனமாக்கவேண்டும். அவ்விதமாய் மேல்நோக்கத்தையே கைக்கொண்டு ஏன் கஷ்டப்படவேண்டும், அதென்ன கஷ்டம், உலகமெல்லாம் ஒரேவிதமாய் மேல்நோக்கத்தையே கைக்கொண்டு விட்டால் வாழ்வது எப்படி? எல்லாரும் பல்லக்கு ஏறுவதாகவிருந்தால் தூக்குகிறவன் வேண்டுமே, என்ற பற்பல கேள்விகள் பிறக்கலாம். படிக்கிறவர்கள் எல்லாரும் மணிஅய்யர், ஸ்ரீநிவாஸையர், ஸ்ரீநிவாஸராகவையங்கார்களாகிவிடவேண்டும், வியாபாரிகள் எல்லாம் சவலை

ராமசாமிமுதலியா ராகிவிடவேண்டும், என்று கிளம்பினல் அது கைகூடுமா, என்ன பைத்தியம்! இது இப்பொழுது குழந்தைகளைப் படிக்கவைக்கும் தகப்பன்மார்கள் ஏதோ அவன் வயிற்றை அவன் கழுவிக்கொண்டால்போதும், மாதம் 30-ரூ. அதாவது ஒரு நாளைக்கு ஒரு ரூபா சம்பளம் வந்தாற்போதும், என் அதிகக் கஷ்டம், கஷ்டப்பட்டால் இலாபம் ஏது. எம். ஏ. பரீக்ஷை கொடுத்தால் கவர்ன்மெண்டில் 15 ரூபாதான் சம்பளம் கொடுக்கிறார்கள். எத்தனையோ பி. ஏ. க்கள் வயதாய் விடுகிறதே என்று சேவகவேலையில் புகுகின்றார்கள், என்பார்கள். இவர்கள் சொல்லுவது முற்றிலும் உண்மை. ஏனெனில் இவ்வித எண்ணம் எப்பொழுது இவர்கள் மனத்தில் புகுந்ததோ அன்றையத்தினமே அக்காள் கடாக்ஷமும் இவர்களிடம் அசையாமலாகின்றது. இவர்கள் எம். எல். கொடுத்தாலும் நாளைக்கு ஒரு ரூபா கூலிதான் இவர்களுக்குக் கிட்டும். ஏன் கஷ்டப்பட வேண்டும்? எல்லாருமே பெரிய வேலைக்கு வரமாட்டார்கள் என்பதே இவர்கள் கொண்ட கருத்தாகும். இவர்களுக்குச் சத்துரு கஷ்டமில்லாமல் ஒருபொழுதும் பயன் என்பது கிட்டாது. இவ்வாறு கஷ்டப்பட மனமற்றவர்கள்தான் ஸாதாரணமனிதர்களாய் விடுகின்றார்கள். அவர்களுக்குத் தாங்கள்முன்னுக்குவருவதில் மனமில்லைபோலும். முன்னுக்கு வரவேண்டும் என்றால் கஷ்டப்பட்டே தீரவேண்டும். அவ்வாறு கஷ்டப்பட துணிந்தவன்தான் பிடிவாதக்காரனாவான். எவ்வளவோ சங்கடங்களனுபவிப்பான். ஈசுவரனும் அவனுக்குத்தான் ஸகாயம் செய்வார். தனது மனோதைரியத்தாலும் உறுதியாலும் வர்த்தகத்தாலும் எல்லாவித ஸங்கடங்களையும் வென்று தான் லட்சியம் வைத்திருக்கும் மேலான ஸ்திதிக்கே நடந்துகொண்டிருப்பான். காலம்ஆக ஆகப் பழுத்தபழம் பாலில் நழுவி விழுவது போல் இவன் மேலானநோக்கம் இவன் கையில்தானே வந்து விழும். மற்ற சோம்பேறிகள் 'என்ன அதிர்ஷ்டமடா இவனுக்கு' என்றுத் நினைத்துநிற்பார்கள்.

அவ்வாறு நாம் ஓர்வித உயர்ந்த நோக்கத்தை ஏற்படுத்திக்கொண்டு அதை ஒட்ட முயன்று வரும்பொழுதுதான் நம்மிடம் ஓர் புருஷசக்தி உண்டாகின்றது. எச்சிறுவனிடம் மனவுறுதியும் முயற்சியும் அதிகமோ அவனிடம் இப்புருஷசக்தி அதிகமாக விளங்கி அவன் தன் முன்வைத்திருக்கும் மேலான நோக்கத்தை எளிதில் அடையச்செய்யும். இவ்விதசக்தி ஒருவனிடம் எப்பொழுது உதிக்கின்றதோ அப்பொழுதுமுதல் அவன் தனது கருத்தைக் கைகூட்டிக் கொள்ளும்வரையில் அவனை அவ்விஷயமாய் முயற்சிசெய்ய ஏவிக்கொண்டே யிருக்கும். புருஷசக்தி அவனுக்கு உற்சாகசக்தியையும் கொடுத்து உழைக்கச் செய்யும். இவ்வித புருஷசக்தி ஒருவனிடம் உதித்து அவனை உழைக்கச் செய்யும்பொழுதுதான் அவனிடம் நடத்தை என்பது ஏற்படுகின்றது. அந்நடத்தை நல் நடத்தையாயிருக்க நாம் கவனிக்க வேண்டும் நடத்தையாவது என்ன? அதனையே ஜனங்கள் வழக்கம் அல்லது ஸ்வபாவம் என்று கூறுவார்கள். நாம் வேண்டுமென்று மனஸ்கரித்துச் செய்யாமலே நம்மிடம் தாமாகவே உதித்தவைகள்போல சில சுபாவங்கள் ஏற்படுகின்றன. அவைகளே நம் பேச்சு, வேலை, நடை, உடை, பாவனை, படிப்பு, எழுத்து இவைகளிலும் ஏற்பட்டுவிடுகின்றன. நாம் சில வேலைகளில் நமக்கு இயற்கையாயில்லாத சுபாவங்களை மேல்போட்டுக் கொண்டுபேச ஆரம்பிக்கின்றோம். "ஆம், நான் சொல்வது உனக்குத்தெரிந்ததா இப்பொழுதுஆம் நான்சொல்லுவது உனக்குத்தெரிந்ததா இப்பொழுது" என்று ஒவ்வொருசொல்லுக்குப்பின்னும் சொல்ல ஆரம்பிக்கிறோம். அதே படிந்துவிடுகின்றது. அதே சொற்ப காலத்துக்குப்பின் ஸ்வபாவம் என்றாகிவிடுகிறது. வலக்கையைவிட்டு இடக்கையால் சில வேலைகளைச் செய்ய ஆரம்பிக்கிறோம்.

அதே வழக்கம் அவ்வேலையில் இடக்கைக்கு வந்துவிடுகிறது. தன் உதட்டின்மேல் தசையைச் சொற்பம் பற்களால் கடிப்பது ஒரு பெரிய மனிதன் அடையாளம் என்று பழகி வருகிறோம். அதே வழக்கத்தில் வந்துவிடுகிறது. அதேமாதிரி ஒருவித நடை ஒருவித உடை இவைகளை ஏற்படுத்திக் கொள்ளுகிறோம். ஆதலால் இவ்வழக்கம் அல்லது சுபாவம் என்பது நாம் நமக்கென்றே ஏற்படுத்திக்கொள்ளும் ஓர் கட்டளைபோலாம். இவ்வித வழக்கத்தை நாம் முன்பின் யோசியாமல் நமக்காக ஏற்படுத்திக் கொண்டுவிட்டால் அவ்வழக்கம் நமது வாழ்நாள் முழுமையும் நம்மைத் தொடருமாகையால் மிக்க ஜாக்கிரதையாய் இருந்து நல்ல வழக்கத்தைமட்டும் கைப்பற்றி கெட்ட வழக்கத்தை அகற்றல் வேண்டும். "தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்" என்பது பழமொழி. புருஷ சக்தியும் உத்தியோக சக்தியும் நம்மிடம் தோன்றி நாம் நல்முயற்சியில் இறங்கும் காலத்தில் தீயவழக்கங்கள் என்று உலகத்தார் சொல்லுமவைகளை நாம் அகற்றல் வேண்டும். ஏனெனில் தீய வழக்கம் உண்டாவது மிக எளிது. உண்டான கெட்ட வழக்கத்தை நீக்குவது மிக கஷ்டம். நம்மில் எத்தனை பெயர் ஜலதோஷம் என்று பொடிபோட ஆரம்பித்து ஒருநாளைக்கு ஒரு அணு பொடிபோடும் ஸ்திதியில் வந்து விடுகிறோம். என்ன கெட்ட வழக்கம் என்று சொற்ப நாளைக்குப் பிறகு நாமே கண்டுகொண்டு நாம் அதை அகற்ற முயலுகிறோம். சாத்தியப்படாமல் பரிதபிக்கிறோம். இது நம்மில் பலருக்குத் தெரிந்த விஷயம்தானே. ஆகையால் சிறுபிராயத்தில் துர்வழக்கங்கள் நம்மைக் கைக்கொள்ளாதபடியிருப்பது நாம் முன்னுக்கு வருவதன் ஓர் பெரும் லட்சணம்.

நல்வழக்கம் ஏற்படுத்திக்கொள்வது இன்றியமையாதது. அறியாமையால் கெட்ட வழக்கங்கள் நம்மிடம் வந்துவிட்டால் அவைகளை எவ்வித முயற்சி செய்தாயினும் தொடக்குங்காலே அகற்றல் வேண்டும். தொடக்கும்பொழுதே அகற்றத் தவறினால் பின் அவைகளை நாம் கைவிட்டு அகற்றல் முடியாத காரியம், கைவிட்டு அகற்ற ஒருபொழுதும்முடியவே முடியாது. சில நல்லவழக்கங்களை நாம் நமது சொந்தமாகப் பிரயத்தனப்பட்டு பண்ணிக்கொள்ளவேண்டும். அவ்வித வழக்கங்கள் யாவை எனில் ஒவ்வொரு விஷயத்தைப்பற்றியும் தீர்க்கமாய் ஆலோசித்து ஆராய்ந்தெடுத்தல். நாம் ஜனங்களுடன் பழகிவந்த அறிவாலும் சாஸ்திர ரூபமாகக் கற்றுக்கொண்ட வித்தையாலும் நமக்குண்டான ஞானத்தை நாம் கைக்கொள்ளல், நாம் ஸம்பாஷிப்பதிலும், பழகுவதிலும், மிகக் கண்டிப்பானவன் என்று பெயரும் புகழும் பெறுதல். நாடோறும் சோம்பலின்றி நமது தேகசக்திக்குத்தக்கபடி தேகமுயற்சி செய்தல், பலவிததொழில்கள் நமக்கிருந்தபோதிலும் ஒருநாளைக்கு ஒருநாழிகைப்பொழுதாவது ஈசுவரவிஷயமாய் நமது மனத்தைச் செலுத்திக் கடவுளுக்கும் பயந்தவன் என்ற பட்டம் பெறுதல் இவை போன்றவைகளேயாம். நாம் செய்யப்புகும் ஒவ்வொரு காரியத்தையும் சுறுசுறுப்பாயும் செட்டாயும் செய்ய வழி தேடல்வேண்டும். அன்றியும் நாம் ஓர் காரியத்தில் இறங்குமுன் அதைச் சீராகச் செய்து முடிக்கும் வகையை வெகு நன்றாக அறிந்திருக்கவேண்டும்.

நாம் நல்வழக்கங்களைப்பற்றி மேலே சொன்னபிறகு கெட்ட வழக்கங்களைப்பற்றி விவரிப்பது அவ்வளவவசியமாகத் தோற்றவில்லை. ஆயினும் அந்நல்வழக்கங்களுக்கு எதிரான வழக்கங்களே கெட்ட வழக்கங்கள். அவைகளைச் சுருங்கச்சொல்லின்—ஒன்றைப்பற்றித் தீர்க்கமாக ஆலோசிக்காமல் மேல் மிதந்தவாறு நினைத்து அக்காரியத்தில் இறங்குவதே. இது மிக

வும் கொடிய வழக்கம். இதுமட்டும் சிறுவயதில் நமக்கு வந்துவிட்டால் ஒருபொழுதும் நம்மை விட்டு நீங்கவேமாட்டாது. ஒரு காரியத்தை இக்காலத்தில் செய்கிறது, இவ்வண்ணம் செய்கிறது, என்ற ஏற்பாடுகளில்லாமல் ஆரம்பித்தால், தேகவியாயாமமில்லாமல் சோம்பலாய் எப்பொழுதும் உட்கார்ந்திருத்தல், ஈசுவரன் ஒருவனிருக்கிறன், அவனுக்குப் பயந்து நடக்கவேண்டும், என்ற பயமில்லாமலிருத்தல், கணக்குவைக்காமல் கண்டபடி பணத்தைச் செலவிடல், இவைகள் எல்லாம் கெட்ட வழக்கங்களில் கொடிய வழக்கங்கள். இவைகள் தன்னை அணுகாமல் ஒவ்வொருவனும் தன்னை இளம்பிராயத்திலேயே பாதுகாத்துக்கொள்ளக் கடவன்.

எவனொருவன் தான் முன்னுக்குவர விரும்புகிறனே அவன் இவ்வண்ணம் கெட்ட வழக்கங்களை முற்றிலும் அகற்றி அவைகள் ஒருக்கால் தன்னை அறியாமல் பற்றிக்கொண்டால் மனோதைரியம் என்ற வாளால் அதன் வேரை முற்றிலும் அறுத்து நல்வழக்கங்களையே கைப்பற்றி படிப்படியாக ஒருவன் மனோநோக்கு விருத்திக்கு வர ஆரம்பிப்பானனால் அவன் ஏன் முன்னுக்கு வராமலிருப்பான்? மிக்க நிதானத்துடனும் மனவுறுதியுடனும் ஜாக்கிரதையுடனும், ஊக்கத்துடனும் நல்ல வழக்கங்களையே கைப்பற்றி அவைகள் தன்னிடம் குடிகொண்டுவளரச்செய்து, மேன்மேலும் ஓங்கி விருத்தியடையும்படி ஒருவன் செய்வானனால் அவன் மேன்மை அடையாமலிருப்பானு? இவ்வாறு நல்வழக்கங்கள் ஆழ்ந்து பதிந்தவனைத்தான் உலகத்தார் புருஷசக்தி அமைந்த தீரன் என்பார்கள். இவ்வித புருஷசக்தி படைத்தவன்தான் மேன்மை அடைந்தவன்.

காலஞ்சென்ற பண்டித நடேச சாஸ்திரியார்.

# குறைந்தவிளைவும் அதிக அகவிலையும்

## DIMINISHING PRODUCE & HIGH PRICES

அகவிலை அதிகம்:—சென்ற சில வருஷங்களாக உணவுக்கு இன்றியமையாத பண்டங்கள் யாவும் நாளுக்குநாள் விலையதிகரித்துக்கொண்டே வரக்காண்கிறோம். முக்கியமாய் அரிசி, பருப்பு, நெய் முதலியவைகளின் விலை இப்போது முன்னிருந்ததைவிட இரண்டு பங்கு அதிகரித்திருக்கின்றது. இப்படி விலைவாசிகள் அதிகரிப்பதால் ஏழை ஜனங்களுக்கும், சொற்பவரும்படியில் ஜீவனம் செய்பவர்களுக்கும், அதிக கஷ்டம் உண்டாகிறது. இந்த விஷயத்தைப் பற்றி சென்ற டிசம்பர் மாதத்தில் சென்னையில் கூடிய காங்கிரஸ்ஸில், பலர் கூடிப் பேசி தீர்மானங்கள் செய்தார்கள். இப்போது கவர்ன்மெண்டாரும் இது விஷயத்தில் கவனித்து ஏழை ஜனங்களுக்கு அதிக துயரத்தை விளைவிக்கும் அகவிலைக்குக் காரணம் என்னவென்று விசாரணைசெய்து தெரிவிக்கும்படி, கமிடியொன்றை யேற்படுத்தப் போகின்றார்களாம்.

காரணங்கள்:—இப்படி அகவிலை ஏறுவதற்கு அநேக காரணங்கள் சொல்லுகிறார்கள். (1) தேசத்தில் உற்பத்தியாகும் பண்டங்களை விற்பனைசெய்ய பெரிய வியாபாரிகள் வசிக்கும் இடங்களுக்கு சிறிய குடித்தனக்காரர்கள் அனுப்ப முடியாமலிருக்கின்றார் என்றும்; (2) குடித்தனக்காரர்களுக்கு செய் நேர்த்தி செலவுக்கு கடன் கொடுக்கும் சாவகாரிகள் அதிக வட்டி வாங்கிக்கொள்ளுகிறார்களென்றும்; (3) குடித்தனக்காரர்கள் சோம்பேறித் தனமாயிருந்துகொண்டு செம்மையாய் உழைத்து வேலை செய்வதில்லையென்றும்; (4) அன்னியதேசங்களுக்கு அரிசி முதலிய பண்டங்கள் ஏராளமாய் ஏற்றுமதியாய் விடுகின்றனவென்றும்;

(5) பெரிய குடியானவர்கள் மாசூலைச் சேகரித்துச் சேரில் கட்டிவைத்துக் கொள்வதால் விற்பனைக்குக் கொஞ்சம் தானியந்தான் வருகிறதென்றும்; (6) நெற்பயிர் செய்த நஞ்சை நிலங்களில் எல்லாம் விசேஷமாய் இப்போது புஞ்சைதானியங்களும், பருத்தி, அவுரி முதலிய செடிகளையும் விருத்தி செய்கிறார்களென்றும்; (7) வெள்ளி விலைகுறைந்ததால் சரக்குகள் அதிகக்கிரயமாயிருக்கின்றன வென்று தோன்றுகிறதென்றும்; இன்னம் இவைபோல் வன பிறசாரணங்களையும் அநேகர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

அகவிலை ஏறுவதற்கு முக்கிய காரணங்களாகக் கூறப்படும் இவ்விஷயங்களின் உண்மையை ஆராய்வோம்.

ஆக்ஷேபனைகள்:—முதலாவது குடித்தனக்காரர்கள் தமது மாசூலைத் தக்க கடைகளுக்கு அனுப்பமுடியாமல் இருக்கிறார்களென்பது ஒப்புக்கொள்ளத்தக்கதல்ல. எங்கும் இருப்புப்பாதை ஏற்பட்டிருப்பதால் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குச் சரக்குகளை யனுப்புவது இந்த காலத்தில் கஷ்டமானதல்ல. அரிசியொன்றுமட்டில் எங்கே பார்த்தாலும் ஏறக்குறைய ஒரே விலைக்கு விற்பதால், பண்டங்கள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தாராளமாய் அனுப்பப்படுகின்றனவென்று தெரிகின்றது.

குடித்தனக்காரர்களை நேரில் பார்த்தவர்கள், அவர்கள் சோம்பேறித்தனமாய்ப் பொழுது போக்குகின்றார்களென்று சொல்ல மாட்டார்கள். தமது சரீரத்தை எவ்வளவு சக்தி வேலை செய்யலாமோ அவ்வளவும் வேலை செய்கிறார்கள்.

ஏராளமாய் ஏற்றுமதியாய் விடுவதால், அதிக தானியம் உள்நாட்டில் வியாபாரத்திற்கு வரவில்லையென்று சொல்லும் கருத்தையாராய வேண்டியது அவசியம். பஞ்சாப் கவர்ன்மென்டாரும் இதே காரணத்தை முன்னிட்டே அரிசி விலை அதிகரித்திருக்கலாமென நினைப்பதாய்ப் பத்திரிகைகளால் தெரியவருகிறது. வெளிநாட்டுக்கும் அனுப்பி உள்நாட்டுகளுக்கும் போதிய அளவு விற்பனைக்குக் கொடுக்கத்தக்க அவ்வளவு நிரம்ப அறுவடை கிடையாது.

நன்செய் நிலங்களில் புன்செய் தானியம் சாகுபடி செய்துவிடுகிறார்களென்றும் அதனால் அரிசிவிலை யதிகமாய் விட்டதென்றும் சொல்வதும் தவறும். ஏனெனில் முன் சாகுபடியான புன்செய் நிலங்கள் தவிர இப்போது அதிகமாய்ப் பயிராகின்ற நன்செய் புன்செயும் சேர்த்து அதிக மாசூல்வரும். அப்படி கிடைத்தும் பருத்தி விலையாவது, அவுரி விலையாவது இதர புஞ்சை தானியங்களின் விலையாவது குறையவேயில்லை. அவைகளும் அதிக விலையாய் விற்கின்றன.

வெள்ளி விலையும், நாணய செலாவணி முகாந்தரமும் அதிகவிலையை அதிகப்படுத்துவதென்று நிச்சயமாய்ச் சொல்லுதல் எளிதல்ல. அது மிகவும் சிக்கலான விவகாரம். தேர்ந்த அறிவாளர்கள் இவ்விஷயத்தைப்பற்றி ஆராய்கிறார்கள். சாவகாரிகள் நெல் வட்டிக்குக் கடன் கொடுத்து பிறகு வட்டியாகக் கொண்ட நெல்லைச் சேர்த்துக்கொள்வதால் அதிக நெல் கடைகளுக்கு வரவில்லையென்றும் உறுதியாய்க் கூற முடியாது. சாவகாரிகளும் தமக்கு வேண்டிய தானியம்போக மிகுதியை விற்க வேண்டியவர்களே.

முக்கியமாய் இந்தியாவில் தற்காலம் இருக்கும் கஷ்டம் எல்லாம் நிலங்களில் முன்போல நல்ல பலன் கிடையாமையேயென்று சொல்லலாம். இவ்வாறு நாளுக்குநாள் நிலம் குறைந்த அளவு மாசூலைக் கொடுப்பதைத் தடுத்து அதை விருத்திசெய்யத்தக்க குடித்தனக்காரர்கள் எல்லாம் பழைய மார்க்கங்களையே அனுசரிப்பவர்

களாயிருக்கின்றாரே யொழிய புதிதாய் உபயோகத்திற்குவரும் ரசாயன எருக்களை, உபயோகிப்பதில்லை. உழுது பயிர் செய்வதில், நிலம் எவ்வளவு ஆழம் கீறப்பட்டு களிப்பாய் இருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு தக்கபலன் கிடைக்கும். நல்ல தீனியில்லாத சப்பை மாடுகளை வைத்துக்கொண்டு நல்ல உணவும் இல்லாத இளைத்த குடியானவன் செய்யும் பயிரும் இளைத்தே போகின்றது. ஆகவே விலையதிகமாய் விற்றாலும், முன் கிடைத்ததைவிட குறைந்த மாசூலே கிடைப்பதால், விலையேறி விற்பதில் குடியானவனுக்கு பிரயோஜனம் சிறிதுமில்லாமற்போகிறது.

தாங்கள் அணை முதலிய கட்டுவதற்காக வருஷந்தோறும் ஸர்க்காரில் இவ்வளவு பணம் என்று நிர்ணயித்துச் செலவிடுகிறார்கள். மேலும் ஜலாதாரமில்லாத விடத்தில் ஜலாதாரம் உண்டுபண்ண முயற்சியும் எடுத்துக்கொள்ளுகிறார்கள்.

ஆகவே விவசாய விஷயங்களில் தேர்ச்சிபெற்று பழைய பழக்க வழக்கங்களே பெரிதென்றெண்ணாமல் இதரதேசங்களில் பயிரிடும் மாதிரிகளையும், எரு முதலியவற்றையும் நமது தேசத்திலும் உபயோகப்படுத்தி எர்மாடுகளைப் புஷ்டியாக வைத்துக்கொண்டு விவசாயம் செய்யின் அதிக மாசூல் அறுவடையாகும். ஒருவாறு அகவிலை யிறங்கிவிற்கவும் ஹேதுவுண்டு.

இந்தியாவில் நூற்றில் எண்பதுபேருக்கு முக்கிய சாதனமாகவுள்ள தொழில், பயிர்தொழிலாயிருப்பதால், இது விஷயத்தில் அதிக கவனம் செலுத்தி பயிரிடுங் குடிகளுக்குத் தக்க விவசாய விஷயங்களைப் போதிப்பது கற்றவர் கடமையாகும்.

# ஆப்பிரிக்காவில் விவாக விமரிசைகள்

## AFRICAN MARRIAGES

இப்பூவுலகின்கண் உள்ள மானிட ஜாதியார்கள் பலருள் பல வேறுவகைப்பட்ட பழக்க வழக்கங்களுண்டென்பது யாவருமறிந்த விஷயம். ஒருமனிதன் ஒரு ஸ்திரீயை மணஞ் செய்துகொள்ள அனுஷ்டிக்கவேண்டிய விதிகள் பலஜாதியார்களில் பலவிதமாயிருக்கின்றன. ஐரோப்பிய ஜாதியார்களில் விவாகம் ஒருவிதமான குத்தகையைப்போல் ஆகிறது. தக்க வயதுவந்த புருடன் பருவமடைந்த ஸ்திரீயைத்தேடி மனத்திற்கியைந்தபடி விவாகம் செய்துகொள்ளுகிறான். பிறகு தக்க முகாந்திரங்களின்பேரில் கணவனும் மனைவியும் பிரிந்து புனர்விவாகஞ் செய்துகொள்ளலாம். நம் தேசத்திலும் சில கீழ்ஜாதியார்களில் இவ்வித வழக்கமிருப்பதாகத் தெரிகிறது.

பிராம்மணர்கள் போன்ற உயர்ஜாதியார்களில் விவாகம் என்பது மிகவும் சிரேஷ்டமாகக் கருதப்பட்டு குடும்பத்தில் எவ்வித மனஸ்தாபங்கள் நேரிட்டபோதிலும் கணவனும் மனைவியும் ஒருமைப்பட்டு வாழவேண்டியதாகிறது. புருஷன் புனர்விவாகஞ் செய்துகொண்டாலும் ஸ்திரீ செய்துகொள்ளக்கூடாது. மேலும் கல்யாண விமரிசைகளிலும் வித்தியாசமுண்டு. நாகரீகமதிகப்பட பெண்வீட்டுக்காரர்களுக்கு அதிகப்பணம் வரதக்ஷிணை (எதிர்ஜாமீன்) கொடுக்க வேண்டி வருகிறது. 1000 ரூ 2000 ரூ வரதக்ஷிணை கொடுக்கவேண்டியது சம்பவித்தலால் பெண் என்றால் புண் என்றே பிராமணர்களில் அநேகர் இப்பொழுது எண்ணுகிறார்கள். குருக்கள் தெலுங்கபிராமணர்கள் போன்ற சில வகுப்பார்களில் மட்டும் இவ்வழக்கம் இன்னும் அனுஷ்டானத்திற்கு வரவில்லை. ஆபிரிக்காவில் புராதான காலம் முதலிருந்து வரும் நாகரீகமற்ற சில ஜாதியார்களில் விவாகஞ் செய்துகொள்ளும் விதங்களைப்பற்றி

இம்மாதச் சஞ்சிகையில் சுருக்கமாய் கூறுவோம். சில வழக்கங்கள் மிக்க விநோதமாகவும் ஆச்சரியமாகவு மிருக்கின்றன. அங்கு சில ஜாதியார்களில் விசேஷமாய் ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ்செய்துகொள்ள அபிப்பிராயமுள்ளவனாக தெரிவிப்பானானால் அப்பெண் அவனை முதலில் ஒப்புக்கொள்வதேயில்லை. ஏனெனில் அவனிடம் அவ்வாறு தன் சம்மதத்தைச் சீக்கிரம் காட்டினால் தன்னை அவமரியாதையாய் பின்னால் நடத்துவான் என்றும், தான் விவாகஞ் செய்துகொள்ள இஷ்டமில்லாதவளாகக் காட்டும்பட்சத்தில் தன்னிடம் அவன் இன்னம் அதிக பட்சம் காட்டி வருகிறானா என்றும் அறிவதற்காகவே விசேஷமாய் ஆப்பிரிக்காவில் பெண் வீட்டுக்காரர்களுக்கு பணம் முதலியவை கொடுத்து விவாகஞ்செய்துகொள்வதே ஒழிய பெண்வீட்டுக்காரர்கள் மாப்பிள்ளைக்கு பணம் கொடுப்பது கிடையாது. சில ஜாதியார்களில்ஒருவன் பலமனைவிகளைவிவாகஞ் செய்துகொண்டு படும் அவஸ்தைகள் அநேகம். மனைவிகள் விஷம்போட்டுத் தன்னைக் கொல்ல எத்தனிப்பார்களென்ற பயத்தினால் மனைவிகளை முதல் சாப்பிடச்செய்து பிறகு தான் உண்பதும், மிக்கப் பிரியமுள்ள மனைவியைமட்டும் சமையல் செய்யச்சொல்வதும், மனைவிகளின் குழந்தைகள் ஒருவருக்கொருவர் சண்டை சச்சரவு புரிவதுமே, அவன் வாழ்நாளை வீழ்நாட்களாக்கப் போதுமான சாதனங்களா யிருக்கின்றன. கிலிமேஞ்சரோ (Kilimanjaro) என்னும் மலைக்குப் பக்கத்தில் வாமோஷி (Wamoshi) என்னும் ஒரு ஜாதியா ரிருக்கிறார்கள். அவர்களில் ஒரு வாலிபன் ஒரு சிறுமியை மணஞ்செய்ய விரும்பினால் அவன் அவள் வேலைசெய்யுந் தோட்டத்திற்குச் சென்று கண்ஜாடைகள் செய்து நோக்க அவள் அவனையும் அவ்வாறே ஜாடையாய் பார்ப்பாளானால் தன்னை அவள் மணம் புரிவாளென்று அவன் நிச்சயஞ் செய்துகொள்கிறான். பிறகு வீடுவந்து அவளிடம் சிநேகிதனொருவனை அனுப்பித் தன்னிஷ்டத்தைத் தெரிவிக்கும்படி செய்கிறான். அவள் உடன்படின் பெண்ணின் தாய்தந்தையர்களிடஞ்சென்று விஷயத்தைத் தெரிவிக்கிறான். பெண்ணின் பிதா அவனை ஆடுகளாவது மாடுகளாவது கொண்டுவந்தால்தான் மறுமொழி கூறுவதாகச் சொல்லுகிறான். அவன் அவைகளைக்கொண்டுவந்ததும் மறுபடியும் பெண்ணின் தாயாருக்காக சில ஆடுகள் கொண்டுவரச் செய்கிறான். இவைகளையும் கொண்டுவந்தால் பெண்ணுக்காக சில ஆடுகளைக்கொண்டுவரச் செய்கிறான். இவைகளும் வரவே கல்யாணப்பேச்சுகள் நடந்து பெண்ணுக்குஞ் செய்யவேண்டிய சீர்களைப்பற்றியப் பேச்சுகள் நடக்கின்றன. சாதாரணமாய் 30 ஆடுகள்தான் பெண்ணுக்குக்கொடுப்பது இந்த ஜாதியார்களின் வழக்கம். இப்படி நிச்சயம் பண்ணினபிற்பாடு கல்யாணஞ் செய்துகொள்பவன் தன் சிநேகிதர்களில் சிலரை பெண் வீட்டுக்கனுப்பி தான் விவாகஞ் செய்யப்போகிற பெண் அதிகாலையில் வீட்டுக்குவெளியே வந்ததும் அப்பெண்ணைத் தூக்கிவரும்படி செய்கிறான். அப்பெண் கீச்சிட்டுக் கதருதலும் அவளோடுகூட வரும்பெண்கள் துக்கிப்பதாக பாசாங்குசெய்வதும் பார்க்கிறவர்களுக்கு மிக்க விநோதமாயிருக்கும். அப்பெண் கணவனாகப்போகிறவன் வீடுவந்ததும் ஒரு மாதகால பரியந்தம் அவனால் போஷிக்கப்பட்டு வருகிறாள். மாதமுடிந்ததும் அவள் தேக சவுக்கியமாயிருப்பாளானால் விவாகம் நடந்தேறும். தேகம் மெலிந்து இளைத்துப்போனால் அவன் அவளுக்குத்தக்கக் கணவனாக மதிக்கப்படமாட்டான். விவாகம் முடிவுபெற்றால் அதற்கடையாளமாக பெண் கால்களில் ஒருவிதமான கொலுசுகள் போட்டுக்கொண்டு வெளியே போவாள்.

மேஸை (Massai) என்ற ஜாதியார்களின் வழக்கங்கள் வேறுவிதமாக இருக்கின்றன. இவர்கள் சண்டையில் வெகு சூரர்கள். ஒரு சிறுவன் ஒரு சிறுமியை விவாகஞ்செய்து

கொள்ள விரும்பினல் தன் பந்துக்களை அச்சிறுமியின் தாயிடம் புகையிலையால் செய்த ஒருவித பட்சணத்தைக் கொடுத்தனுப்புகிறுன். பெண்ணின் தாயார் அதை ஒப்புக்கொண்டால் கல்யாணம் நிச்சயமானதற் கடையாளம். பெண் பருவமடைந்ததும் அவன் ஒரு கன்றுகுட்டி, இரண்டு பசு, ஒரு எருமை, நாலு ஆடுகள், இரண்டு சீசா தேன் இவைகளை எடுத்துக் கொண்டு பெண்வீடு சேருகிறுன். தேனை பெண்ணின் மாதா பிதாக்களும் இதர பந்துக்களும் வாயில்போட்டுக்கொண்டு பெண்ணின் சரீரத்தில் துப்பியானபிறகு விவாகம் நடக்கிறது. பரிசம்போட்ட பிறகும் கல்யாணமாவதற்கு முந்தியும் புருஷன் விவாகஞ் செய்துகொள்ளவேண்டிய ஸ்திரீயைப் பார்க்கக் கூடாது. தற்செயலாய்ப் பார்த்துவிட்டால் அவ்வபராதத்தை நீக்க இரண்டு ஆடுகள் பெண் வீட்டுக்காரர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

வேஸுக்ரா (Wasugra) என்ற ஜாதியார் வழக்கம் வேறுவிதம். ஒருவன் ஒரு ஸ்திரீயை மணந்துகொள்ள வேண்ட அவளுடன் பட்டால், அதற்கடையாளமாக அவளிடம் ஒரு மோதிரத்தைக் கொடுக்கிறுன். வேறு யாராயினும் பின் அப்பெண்ணை விரும்பினல் அவள் தன் விரலி லணிந்திருக்கும் மோதிரத்தைக் காட்டினல் போய்விடுவார்கள். பிறகு நிச்சயம் செய்தவன் சாமான்களை சேகரித்துக்கொண்டு பெண்வீடுசெல்ல கல்யாண நிர்ணயம் நடக்கிறது. மாப்பிள்ளை ஏழையாயிருந்தால் சில கோழிகளும் சாவல்களும் கொடுக்கிறுன். கோழிகளைக்கொன்று விருந்து நடக்கிறது. பிறகு கல்யாண சடங்குகள் நடக்க புரோகிதர்கள், கணவனும் மனைவியும் ஒருமைப்பட்டு வாழவேண்டுமென்று அவர்களுக்கு புத்திமதிகூற சபை கலைகிறது. இதே ஜாதியாரில் வேறொரு வழக்கமு மிருக்கிறது. ஒருவன் ஒரு குழந்தை கர்ப்பத்திலிருக்கும் பொழுதே கர்ப்பிணி ஸ்திரீ வீடுசென்று குழந்தை பெண்ணுய்ப் பிறந்தால் தனக்கு விவாகஞ்செய்து கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறுன். அவர்கள் சம்மதித்தால் அவர்கள் வீட்டிலேயே வேலைக்காரனு யமர்ந்து பொறுமையுடன் வேலைசெய்கிறுன். இவ்வளவும் செய்து பொறுமையுடன் காத்திருக்கையில் குழந்தை புருஷக்குழந்தையாகப் பிறந்தால் அவனுக்குண்டாகும் துக்கம் மிகவும் அதிகமாயிருக்கும்.

பெண்ணுய்ப் பிறந்தால் பிறந்த மூன்றுவயது முதலே தாய் தந்தையர்கள் தோட்டத்தில் வேலை செய்பவன் அக்குழந்தைக்குக் கணவனென்று தெரிவித்து அவள் அவனுக்குச் செய்யவேண்டிய கடமைகளையெல்லாம் போதிப்பார்கள். அவன் வெளியே போய்வந்தால் அக்குழந்தை அவனை எதிர்சென்று அவன் கொண்டுவரும் கத்தி, மண்வெட்டி முதலியவைகளை வாங்கி உள்ளே கொண்டுபோய்ச் சேர்ப்பது கடமைகளில் ஒன்றுகும். பெண்பக்குவ மடைந்ததும், பெண்ணுக்குக் கொடுக்கவேண்டிய ஐந்து ஆடுகளையும் கொடுக்க விவாகம் முடிவாகிறது.

இவ்விதமாக இன்னும் பலஜாதியார்களின் வழக்கங்கள் பலவிதங்களா யிருக்கின்றன. அவைகளையெல்லாம் எடுத்துச் சொல்லுதல் இச்சஞ்சிகையில் முடியாது. ஐரோப்பியர்கள் சென்றும், அவர்களால் யாதொரு இடையூறு மடையாமல் தங்கள் வழக்கங்களையே இஜ்ஜாதியார்கள் அநேக ஆயிர வருஷகாலங்களா யனுஷ்டித்து வருகிறுர்கள். அவர்கள் தற்காலத்து நாகரீகங்களை யறியாமல் பழைய ஸ்திதியிலேயேயிருக்கிறுர்கள். இவைகளையெல்லாம் நோக்குமிடத்து அவனன்றி யோரணுவு மசையாது என்ற நீதிமட்டும் நன்றுய் விளங்குகிறது.

ஜி. ஸுந்தரேச அய்யர், B.A., L.T.

# இயற்கை அற்புதங்கள்
## WONDERS IN NATURE



### V. கானல்நீரும் அதன் ரூபாந்திரங்களும்
MIRAGE

—

கானல்நீர் என்பது ஸூர்ய வெப்பத்தால் உண்டாகும் ஓர்வித அற்புதத் தோற்றம். இந்தப் பெயரைக் கேட்டதுமே அநேகர் இது தாங்கள் அடிக்கடி பார்க்கும் தோற்றந்தான் என்று எண்ணலாம். அந்தத் தோற்றத்தை வர்ணிக்கும்படி கேட்டால் அவர்கள் 'ஆற்றங்கரை ஓரம் முதலிய மணற்பாங்கான ஸ்தலங்களில் மத்தியான்னம் 12-மணிவேளையில் சென்று நாம் பார்த்தால் மணலிலிருந்து நீராவிபோலவும், புகைபோலவும் தண்ணீர் ஓடுவதுபோலவும் ஓர்வித அசைவு ஒன்று வாயுவில் ஓடுவது காணப்படும், அதுவே கானல்நீர்' என்று உரைப்பார்கள். ஒருவன் தன் தோழனைநோக்கி 'ஆல இலை எப்படி இருக்கும் தெரியுமா?' என்று கேட்டதற்கு, மற்றவன் 'அறிவேன் அறிவேன்! ஆல இலை புளிய இலைபோல இருக்கும்' என்று மறுமொழிகூறித் தனது அறியாமையை வெளியிட்டதாக ஓர் கதை உண்டு. அதுபோன்ற அறியாமையை உடையவர்களே கானல்நீரை முற்கூறியவாறு வருணிப்பவர்கள்.

'கானல்நீரை உள்ளபடி எங்கு காணலாம்? அது எவ்வாறு இருக்கும்?' என்ற கேள்விகள் உண்டாகின்றன. பட்டணத்திலிருப்பவர்கள் கானல்நீரை உள்ளவாறு கண்டறிய வேண்டுமாகில், பங்குனி முதல் ஆனிமாஸம்வரையில் உள்ள கோடைமாஸங்களில் ஸமுத்திரக்கரை சாலைவழியாக மத்தியான்னம் 11 மணிமுதல் 3-மணிவரையில்எப்பொழுது போனாலும்ஸரி அதைநன்றாக்கண்ணாரக் காணலாம். இப்படிச்சிலர் போய் முற்கூறியவர்கள் போல வாயுவில் இருக்கும் தகதகாயமான அசைவைக் கண்டு கானல்நீர் என்று எண்ணி மயங்கி வந்துவிடலாம். போகிறவர்கள் உள்ளபடி கானல்நீரையே கண்டுவருவதற்காகப் பின் வரும் குறிப்புகளை எடுத்துக் காட்டுகிறோம். மைலாப்பூரிலிருந்து சித்திரைமாஸம் ஸூர்யன் நன்றாகப் பிரகாசிக்கும் ஓர்நாள் 12-மணி ஸுமாருக்குப் புறப்பட்டு ஸமுத்திரக்கரையாக ஜட்காவண்டியில் மெதுவாகப்போய் முன்னால் 200 கஜம் தூரத்திற்கு அப்பால்சாலைமட்டத்தை நோக்கல்வேண்டும். அங்கு கருப்பாக தண்ணீர் தேங்கிஇருத்தல்போன்ற தோற்றம் காணப்படும். நமது கண்மட்டத்தில் வாயுவில் நோக்குவதால் பயன் ஒன்றும் இல்லை, நிலமட்டத்தை நோக்கல்வேண்டும். தண்ணீர்த்தோற்றம் காணப்படும் இடத்திற்கு அருகாமையிலிருக்கும் விளக்குக்கம்பம், செடி முதலியன அந்த தண்ணீருள் ப்ரதிபலித்திருப்பதும் நமது கண்ணுக்கு நன்றாகப்படும். அந்த ஸமயத்தில் யாராவது வேஷ்டி கட்டிக்கொண்டு செம்படவர்கள் அவ்விடத்தில் காணப்பட்டால் அவர்களது பிரதிபிம்பமும் கீழே தெரியும். ஸூர்யவெப்பத்தால் இத்தோற்றத்தில் அசைவு சிற்சில ஸமயங்களில் உண்டாக பிரதிபிம்பங்கள் அசைந்தாடும்: இதனால் தண்ணீர் அசைவதுபோல நமக்குத் தோன்றும். இதை முன்பின் பார்த்திராத ஒருவனுக்கு ஸமுத்திரக்கரைச் சாலையில் கொஞ்சம் தண்ணீர் தேங்கியிருப்பதாகவே தோன்றும். அவனுக்கு பிரமை உண்டாகும். அதிகமாகக் கால் சுடும் ஒருவனுக்கு அந்தவிடம் விரைவிற்சென்றால் கலமாக இருக்கும் என்ற அப்பொழுது தோன்றும். எவ்வளவு ஏமாற்றும் சக்தியை உடையது இத்தோற்றம். இது உண்மையல்லவென்று நாம் அப்பொழுதே அறியவேண்டுமாகில் நாம் போகும் ஜட்கா

வண்டியில் நின்றுகொண்டு முன் பார்த்தவிடத்தை நோக்கினால் அங்கு வெறும் நிலந்தான் காணப்படும். ராஜதானிப் பாண்டித்திய சாலையின் அருகில் சென்று அங்கிருந்தும் கானல்நீரை நன்றாகப் பார்க்கலாம். அதன் ஸ்வரூபத்தை அறியவேண்டுமாகில் அருகில் உள்ள கல் கைபிடிச்சுவரின்மேல் ஏரி நோக்கினால் போதும். அந்த கானல்நீர் இருந்தவிடத்தில் வெறுந்தரையே காணப்படும். இதே தோற்றத்தை ராமேசுவரம் தனுஷ்கோடியிலிருந்து செட்டிஸத்திரம் வரும்வழியிலும் காணலாம். கோடைகாலத்தில் நாம் அந்த ஸத்திரம் நோக்கிவருங்கால் தூரத்திலிருக்கும்பொழுது அதைச்சுற்றி தண்ணீர் தேங்கி இருப்பதாகத் தோன்றும். அதனுள் அங்கிருக்கும் தென்னைமரங்கள் முதலியவைகளின் பிரதிபிம்பங்கள் வெகு அழகாகக் காணப்படும். கிட்டே போகப்போக அந்தத் தோற்றமும் நம்மைவிட்டு அகன்றுபோய்க்கொண்டே இருக்கும். ஸத்திரத்தின் அருகில் வந்துவிட்டால் அங்கு தண்ணீர் ஒன்றும் காணாமல் போய்விடும். உடனே அது உண்மையான தோற்றமல்ல என்பது நமக்குத் தெரியவரும். மணற்பாங்குகளில் இம்மாதிரித் தோற்றங்கள் உண்டாகும். இதைக்கண்ட தாகமுடைய மிருகங்கள் இதை நோக்கி ஓடி தண்ணீர் அகப்படாது பரிதவிப்பது வழக்கம். இதனால் இந்தத் தோற்றத்திற்கு மிருகதிருஷ்ணிகா என்று ஸமஸ்கிருதத்தில் பெயர்.

இம்மாதிரியான தோற்றம் பாலைவனங்களில் ஏராளமாக உண்டு. ஆப்பிரிக்கா கண்டத்திலுள்ள ஈஜிப்டு தேசத்தின்மேல் பிரான்ஸ் அரசனாகிய நெப்போலியன் படை எடுத்துவந்தகாலத்தில் அவன்ஸேனைகள் அங்கு காணப்பட்ட கானல்நீரைக்கண்டு மயங்கி அது நிஜமான தண்ணீர் என்று எண்ணி மிகுந்த ஆவலோடு அதைத் தொடர்ந்துசென்று அநேகந்தரம் மோசம்போயின. அந்தக் கண்டத்திலேயே ஸஹாரா என்ற பெரிய பாலைவனத்தில் இம்மாதிரியாயும் இன்னும் அநேகவித அற்புதமாயும் உள்ள தோற்றங்கள் காணப்படுகின்றன. கானல்நீர் தண்ணீர் உருவாகத்தோன்றுவதோடுகூடச் சிற்சில ஸமயங்களில் வேறுவிதமாகவும் தோன்றும். பாலைவனத்தில் போகும் பிரயாணிகளுக்குத்தோற்றம் அடிவானத்திற்கு அப்பால் அநேகம் மயில் தூரத்திலிருக்கும் ஓர் செழிப்பான ஊர் ஸூர்யவெப்பத்தின் சக்தியால் பிரயாணிகள் கண்முன்பு ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்கிநிற்கும். இந்தமாதிரியான கானல்நீரையே இங்கு சித்திரத்தில் காட்டப்பட்டிருக்கிறது. இந்தத் தோற்றத்திற்கே வேதாந்த சாஸ்திரங்களில் கந்தர்வநகரம் (ஆகாயத்தில் காணப்படும் அற்புதத்தோற்றம்) என்று பெயரிட்டிருக்கிறார்கள்போலக் காணப்படுகின்றது.

கானல்நீரைப்போலத் தோற்றங்கள் அசைவற்றிருக்கும் விசாலமாகிய ஸமுத்திரஜலப் பரப்பில் சிலவிடங்களில் காணப்படும். இதனால் தூரத்தில் ஓடுவனவையும் கண்ணுக்குத் தெரிவனவாயும் உள்ள கப்பல்கள் சற்று உயர்ந்து காணப்படும். சிற்சில ஸமயங்களில் அவைகளின் பிரதிபிம்பம் தலைகீழாக அவைகளுக்கு நேரே சற்று மேலே காணப்படும். வேறு இடங்களில் கப்பலைப்போன்ற மூன்றாவது உருவமும் காணப்படும் இது முற்கூறிய தலைகீழான பிம்பத்திற்கு மேல்பட்டே காணப்படும். 1822 வருஷம் வடக்குத் துருவத்தின் அருகாமையில் உள்ளபிரதேசங்களில் கப்பல் யாத்திரை செய்துகொண்டிருந்த ஸ்நோஸ்பி என்ற மாலுமி அதிபதி, ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்கும் ஓர் கப்பலை தம் முன் கண்டார். அந்த உருவம் மிகத் தெளிவாகத் தோற்றினமையால் அதைத் தமது தகப்பனார் கப்பலாகிய கீர்த்தி என்று உணர்ந்தார். இரண்டு மூன்று மணிக்குப் பின், தமது தகப்பனார் கப்பலை இவர் ஸந்திக்கவேண்டிவர அவரிடம் இருந்த தாம் அற்புதத் தோற்றத்தைக்கண்ட ஸமயத்தில் அவர் கப்பல் தம்மைவிட்டு 30 மைல் தூரத்தில் இருந்ததாகத்தெரிந்துகொண்டார். இது ஸஹாராவில் தோன்றிய கந்தர்வநகரத் தோற்றத்தைப் போன்றது. தென்னாப்பிரிக்காவில் உள்ள நன்னம்பிக்கை முனையிலும் இம்மாதிரித் தோற்றங்கள் அடிக்கடி காணப்படும்.

சிற்சில ஸமயங்களில் வாயுவில் ஸூர்யன் ஒளியால் உண்டாக்கப்படும் மாறுபாட்டால் தூரத்திலிருக்கும் வஸ்துக்கள் அருகாமையில் காணப்படுகின்றன. இம்மாதிரியான அற்புதத் தோற்றம் ஒன்று 1868-ம் வருஷம் மேமாஸம் 26-ம் தேதியில் இங்கிலாந்திலுள்ள டோவர் துறைமுகத்தில் காணப்பட்டது. டோவரில் ஸமுத்திரம் 23 மையில்தான் அகலம். எதிரில் இருக்கும் பிரான்ஸ் கரை டோவர் துறைமுகத்திலிருந்து பார்த்தால் கண்ணுக்குப் புலப்படாது. பிரான்ஸுக்கரையில் டோவருக்கு எதிராக போலோன், கலே என்ற இரண்டு பட்டணங்கள் உண்டு. முன் குறிப்பிட்ட தேதியில் போலோன்

கோயில் பெரிய கலசமும், அவ்வூர் நெபோலியன் ஜயஸ்தம்பமும் திடீரென்று டோவரிலிருப்பவர் கண்ணிற்குத் தென்பட்டது. ஒருநாளும் காணாத தோற்றத்தைக் கண்டதும் டோவரிலிருந்தவர் சிலர் ஸாதாரண சக்தி உடைய தூரத்திருஷ்டிகண்ணாடியால் இந்தத் தோற்றத்தை மிகுந்த ஆவலோடு பரிசோதித்துப் பார்த்தனர். அப்பொழுது பொலோன் துறைமுக வாயிலும், தீபஸ்தம்பமும், அங்கிருந்த கப்பல்களும், சுற்றுப் பிரதேசங்களும் இவர்கள் கண்ணுக்கு நன்றாகப் புலப்பட்டன. இப்படி இவர்கள் பார்த்துக்கொண் டிருக்கையிலேயே பொலோனிலிருந்து கலேயைநோக்கி நீராவி கக்கிக்கொண்டு ஓர் புகைவண்டித்தொடர் புறப்படுவதை இவர்கள் கண்டார்கள். அஸ்தமிக்கும் ஸூர்யன் ஒளி பொலோனிலிருக்கும் கிராமங்களிலுள்ள வீட்டுஜன்னல் கண்ணாடிகளில் பட்டு பிரதிபலித்ததையும் இவர்கள் கண்ணாடிமூலமாகக் கண்டார்கள். ஸூர்யன் அஸ்தமித்ததும் இத்தோற்றம் உடனே மறைந்துவிட்டது. அப்புறம் வெகுகாலம் இது மறுபடி உண்டாகவில்லை.

கந்தர்வநகரம், அசைவற்ற ஸமுத்திரங்களில் உண்டாகும் தலைகீழ்த்தோற்றம், டோவரில் உண்டான தோற்றம் ஆகிய இவைகள் கானல்நீரின் ரூபாந்திரங்கள்; அதாவது கானல் நீர் உள்பட எல்லாம் ஒரேவித காரணத்தின் பரிணமத்தால் உண்டாகிவரும் பேதமானகாரியங்கள் என்று நாம் தெரிந்துகொள்ள வேண்டும்.

கானல்நீர் அதன் ரூபாந்திரங்கள் ஆகிய இவைகள் உண்டாகக் காரணம் யாது என்ற கேள்வியை எடுத்துக்கொள்ளுவோம். ஒளியானது வஸ்துக்களின்மேல் பட்டமாத்திரத்தில் அதிலிருந்து (முகம்பார்க்கும் கண்ணாடியிலிருந்து வருகிறாற்போல) பிரதிபலிக்கவாவது, அல்லது ஸாதாரணக் கண்ணாடிக்குள் செல்வது போலாவது ஊடுருவிப்போகவாவது வேண்டும். ஸாதாரணக்கண்ணாடிபோன்ற பதார்த்தங்களில் ஒளி ஊடுருவிப்போகுங்கால் கண்ணாடியுள் அது போகும் மார்க்கத்திற்கும் வெளியில் வந்துகொண்டிருந்த மார்க்கத்திற்கும் பேதம் காணப்படும். ஆகையால் ஒளி வெளியில்போகும் மார்க்கத்தினின்று வளைந்துதான் கண்ணாடியுள் போகவேண்டும். அதேமாதிரி மறுபடியும் கண்ணாடியுள்ளிருந்து ஒளி வெளியேவருங்கால் முன் வளைந்ததற்கு விரோதமாக அது வளைந்தே வெளிவரவேண்டும். இதனால் ஒளி ஊடுருவிச் செல்லும் பதார்த்தங்களுள் அடர்த்திகுறைந்தபதார்த்தங்களில் இருந்து அடர்ந்த பதார்த்தங்களிலாவது அல்லது மாறாகவாவது போனால் அது அவசியம் வளைந்தே போகவேண்டும் என்பது தெரியவருகிறது

முற்கூறிய வளைவின் ஸ்வரூபத்தை அறிந்ததின் பேரில் பிரகிருதி சாஸ்திரத்தில் தேர்ந்தவர்கள் பின்வரும் அற்புதத்தைக் கண்டறிந்திருக்கிறார்கள். அடர்த்தி அதிகமாக இல்லாத வஸ்துவிலிருந்து ஒளி எப்படி வந்து அடர்ந்த வஸ்துவின்மேல் தாக்கிய போதிலும் அது வளைந்து அடர்ந்தவஸ்துவுள் ஊடுருவிசசெல்லுமென்றும், அவ்வாறின்றி ஒளி மிக அடர்ந்த வஸ்துவிலிருந்து அடர்த்தி அதிகமாக இல்லாதவஸ்துவில் வந்து தாக்குமாயின் ஓர்விதமான சரிவு வரையில் அது அடர்த்திகுறைந்த வஸ்துவில் ஊடுருவிச்செல்லும் என்றும், அந்த சரிவிற்கு மேற்பட்டால் அந்த ஒளி அடர்த்தி குறைந்தவஸ்துவில் ஊடுருவிச்செல்லாது அடர்த்தி அதிகமாக உள்ள வஸ்துவிற் குள்ளேயே முகம்பார்க்கும் கண்ணாடியில் பிரதிபலிப்பதுபோல பிரதிபலித்துவிடும் என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள். ஒளி ஊடுருவிச்செல்லும்படியான அடர்த்திகுறைந்த வஸ்துவின்மேல் அடர்த்தி அதிகமான வஸ்துவிலிருந்துவந்து தாக்கும் ஒளியின் சரிவுமிகுதியால் அதுமுன்னதன் உள்ளே போகாது அடர்த்திமிகுந்தவஸ்துவுள்ளேயே பிரதிபலிப்பதற்கு பூர்ணஅந்தர் பிரதிபலனம் என்றபெயர் இதுகானல்நீரை உண்டாக்குவதில் முக்கியமான காரணம். அடர்ந்த வஸ்துவிலிருந்து அடர்த்தி குறைந்தவஸ்துவிற்குள் ஒளிபோகுங்கால் அதற்கு சரிவு அதிகமாகின்றது என்பது கானல்நீர் விஷயத்தில் இரண்டாவது காரணம். உஷ்ணத்தால் வாயுவிற்கு அடர்த்தி குறைகின்றது, குளிர்ச்சியால் அடர்த்தி அதிகமாகின்றது என்பதை இந்த விஷயத்தில் நாம் மூன்றாவதாகத் தெரிந்து கொள்ளவேண்டியது.

முன் எடுத்துக் காட்டியுள்ள உண்மைகளிலிருந்து கானல்நீரும் அதன் ரூபாந்திரங்களும் உண்டாகும் விதத்தை நன்கு விளக்குவோம். உஷ்ணதேசங்களில் ஸூர்யன் உயர்ந்து வெப்பம் அதிகரிக்குங்கால் பூமிமட்டத்திற்கு அருகாமையிலுள்ள வாயுவின் அடிப்பாகம் எல்லாம் உஷ்ணத்தால் அடர்த்தி குறைய அதன் மேல்பாகங்கள் எல்லாம் போகப்போக அடர்த்தி அதிகமாகவும் நின்றுவிடுகின்றன. இப்படி இருக்கையில் தூரத்தில் ஓர்மரம் இருப்பதாக எண்ணிக்கொள்ளுவோம். அதிலிருந்து வரும்

நேரானஒளிகள் யாவும் நமது கண்ணில்பட அது தூரத்திலிருப்பதாக நமக்குத் தோற்றம் உண்டாகின்றது. அந்த மரத்திலிருந்து அதன் அருகாமையான பூமிப்பிரதேசங்களை நோக்கிப் போகும் ஒளி வாயுவின் கிரமமான அடர்த்திக் குறைவால் வர வர அதிகமாக வளைக்கப்பட்டு பூமியை வந்து அடையும் முன் சற்று உயரத்திலேயே அதற்கு ஊடுருவிச் செல்லுவதற்கு வேண்டிய சரிவைவிட அதிகச் சரிவுண்டாகிவிடுகின்றது. அந்தவிடத்தில் அந்த ஒளி ஊடுருவிக் கீழ்நோக்கிச் செல்லாது வாயுவின் மேல்பாகத்துள்ளேயே பூர்ண அந்த பிரதிபலம் செய்யப்பட்டுத் நமது கண்ணில்வந்து சேர்கின்றது. எப்படி முகம் பார்க்கும் கண்ணாடியில் பிரதிபலித்த ஒளி நமது கண்ணில் விழுந்ததும் ஒளிவிடும் வஸ்துவின் பிரதிபிம்பம் கண்ணாடியுள் காணப்படுகின்றதோ அப்படியே இங்கும் மரத்தின் பிரதிபிம்பம் ஒன்று தலைகீழாக அதன்கீழேயே காணப்படுகின்றது இம்மாதிரி வாயுவின் கீழ்பாகமானது அடர்த்திக்குறைவால் கண்ணாடிபோல தொழிற்பட அருகாமையிலுள்ள எல்லா வஸ்துக்களின் பிரதிபிம்பங்களும் நமக்குப் புலப்படுகின்றன. இந்த பிரதிபிம்பத்தால் அங்கு ஓர் நீர்நிலை இருப்பதுபோன்ற பிராந்தி நமக்கு உண்டாகின்றது.

ஸூர்யனது உஷ்ணத்தாலாவது அல்லது ஸமுத்திரங்களில் தண்ணீரின் குளிர்ச்சியாலாவது வாயுவில் கண்ணாடிபோன்ற தொழிற்படும் பிரதேசம் மேலே உயர்ந்து நிற்குங்கால் கீழே உள்ள வஸ்துக்களின் பிரதிபிம்பம் ஆகாயத்தில் உண்டாக தலைகீழாக அந்த வஸ்து தொங்குவதுபோன்ற தோற்றம் உண்டாகின்றது. இந்த ஸமயங்களில் நமது அடிவானத்திற்கு அப்பால் வெகுதூரத்தில் இருக்கும் வஸ்துக்களின் ஒளிநேராக நமதுகண்ணில்படாததால் அவை நேராக நமக்குத் தோற்றாவிடினும் அவைகளிலிருந்துவரும் ஒளி வாயுவில் உயரத்தில் உள்ள கண்ணாடிபோன்ற பாகத்தில் பட அதன் பிரதிபலனம் நமது கண்ணில் விழும்படி நேரிடலாம். உடனே அதிகதூரத்தில் இருந்து நமது கண்ணுக்குப் புலப்படாத வஸ்து ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்குவதுபோலக் காணப்படும்படியான கந்தர்வ நகரத் தோற்றம் உண்டாகும். இது உண்டாகும் விதத்தை நன்குவிளக்க ஓர் சுவர் இருக்கிறதாக வைத்துக்கொண்டு அதன் ஒருபுறத்தில் நாமும் மற்றொரு புறத்தில் வேறொருவனும்இருப்பதாகவும்,சுவற்றிற்கு நேர் மேலே ஓர் அகன்ற கண்ணாடி ஒன்று பூமியை நோக்கி நிற்பதாகவும் வைத்துக்கொள்வோம். மறுபுறத்தில் இருக்கும் மனிதன் கண்ணாடியுள் ஆகாயத்தில் தலைகீழாகத் தொங்குவதுபோல நமக்குத் தோன்றுவானல்லவா. அவ்வாறே கந்தர்வநகரத் தோற்றத்திலும் காணப்படுகின்றது.

ஸூர்யவெப்பத்தால் வாயுவில் உண்டாகும் இக் கண்ணாடிப்பாகம் கீழும் மேலும் உண்டாகாது, கீழ்மேலாக நேரேநிற்கும் கண்ணாடிபோல நிற்குமாயின் டோவரில் உண்டானதுபோன்ற தோற்றம் உண்டாகும். தூரத்தில் கண்ணுக்குப் புலப்படாத வஸ்துக்கள் யாவும் தலைகீழாகத்தோன்றாது அருகாமையில் மாத்திரம் கொண்டுவர பட்டனபோலக் காணப்படும். வாயுவில் அநேகக் கண்ணாடிபாகங்கள் உண்டானால் ஆகாயத்தில் அநேகப் பிரதிபிம்பங்களும் காணப்படும்.

இவ்வாறு ஸூர்யவெப்பம், குளிர்ச்சி முதலியவற்றால் வாயுவின் அடர்த்தி மாறுபட அதனால் அதில் கண்ணாடிபோன்ற ஓர்பாகம் உண்டாகின்றது. இந்த பாகம் இருக்கும் மாதிரியால் கானல் நீரும் அதன் ரூபாந்திரங்களும் உண்டாகின்றன.

---

நீராவி யந்திரம் :—ஐந்து பண்ணைக்காரரை வைத்திருக்கிற ஒரு சமுசாரி ஐம்பது ஆட்கள் சேர்த்துத் தூக்க வேண்டிய கனத்த பாரமிருக்கும்பொழுது என்ன செய்வான்? அத்தனைபேர் ஒருவேளை சமயத்துக்குக் கிடைக்க மாட்டார்கள் ; கிடைத்தாலும் அத்தனைபேரும் நின்று தூக்குகிறதற்கு வசதியான இடமிருக்கவு மாட்டாது ; இப்படிப்பட்ட தருணத்தில் அந்தப்பாரத்தை லகுவில் தூக்கும்படியான ஒரு இயந்திரமிருந்தால் எவ்வளவு உதவியாயிருக்கும். துலா ஒரு இயந்திரமாம் ; இதனாலே கிணற்றிலே உள்ள அதிக பாரமான தண்ணீரை இரண்டு மனுஷரின் உதவியைக்கொண்டு சுலுவாய வெளியேற்றலாம். செக்கு ஒரு இயந்திரமாம் ; அநேகம்பேர்கூடி வெகு வருத்தமாய வேலைசெய்து எடுக்கக்கூடிய எண்ணையை இதிலே ஒரிணைமாட்டைப் பூட்டி, ஆட்டி, வெகு லகுவாய எடுக்கிறோம். இயந்திரத்தின் உதவியைக்கொண்டு நமக்குள்ள சக்தியை அதிகப்பிரயோசனம் உண்டாகும்படி செய்துகொள்ளலாம். ஆழமான கிணற்றுக்குள் இருக்கிற பெரிய கல்லையும், சமுத்திரத்திலே போடப்பட்டிருக்கிற பிரமாண்ட நங்கூரத்தையும் கையினாலே தூக்குகிறதைவிட, கப்பியாகிய இயந்திரத்தினாலே எவ்வளவு லேசாய் சாம்பி எடுக்கிறோம். இயந்திரங்களை இயக்குவதற்கு மனுஷனுடைய பலம் அன்றி மாடு, குதிரை, ஜலம், காற்றும் உதவுகின்றன. இவையெல்லாவற்றிலும் பிரதானமாக நீராவியானது மிகவும் பிரயோசனப்பட்டு, இயந்திரத்துக்கு அதிசயமான சக்தியை உண்டாக்குகின்றது. நீராவியின் உதவியைக்கொண்டு நடப்பிக்கப்படும் இயந்திரத்திற்கு நீராவி இயந்திரமென்று பெயர்,

# பம்பாயில் பார்ஸி ஜாதியார் வரலாறு

## THE BOMBAY PARSIS



பம்பாயைப் பார்க்கப்போய்மலபார் ஹில் (Malabar Hill) என்னும் மேட்டுத்தெருவுக்குச் சென்று பார்ப்போமானால், இந்து ஜாதியில் கலக்காத ஜாதியர்களைக் காண்போம். இவர்களே பார்ஸியர் என்னப்படுகிறவர்கள். இவர்கள் ஜயினர்கள் அல்ல, பௌத்தர்களல்ல, மகமதியர்களுமல்ல, இந்துசமயத்திலும் சேராதவர். பூர்வத்தில் இரான் என்றும், இப்பொழுது பேர்ஸியா என்றும், பெயர் வழங்கி இந்தியா நாட்டின் வடமேற்கு மூலையில், அப்கானஸ்தான் நாட்டுக்கு மேலண்டை, பன்னீர், இரான், அந்தர், முதலிய வாஸனைத்திரவியங்களை இந்தியாவுக்கு அனுப்பிவரும் பேர்ஸியாவிலிருந்து, இதற்குச்சுமார் 1300 ஆண்டுகளுக்குமுன், துலுக்கர்என்றுசொல்லப்பட்டமகமதியரால் துரத்தப்பட்டுத் தம் வழக்கப்படி, அக்கியே பரதெய்வம், ஸேன்ட் அவஸ்தையே (ZendAvesta)வேதம், எனத்தாம்கொண்டாடியதை, எப்படியாவது காப்பாற்றிக்கொள்ளும்பொருட்டு வெளிப்பட்டு பம்பாய்ப்பக்கம் வந்திறங்கி குடிபுகுந்தவர்களுடைய சந்ததியர்கள்; இவர்கள் அன்றுமுதல் இந்தியாநாடே தமது நாடாய்க்கருதி, மதுரை ஜில்லாப் பக்கத்து நாட்டுக்கோட்டைசெட்டிமார்களைப்போல, வர்த்தகத் தொழிலையே கைபற்றிப் பிழைத்து மிக்க தர்மம் செய்து இந்தியாவின் நன்மையைத் தேடுவர். இவர்களில் தாதாபாய் நௌரஜியர், ஒருவர். இப்புண்ணியருடைய தலைப்படத்தைமேலே வரைந்திருக்கிறது. அவரைப் புகழ்வது ஒப்பாம், ஆகையால் பார்ஸியஜாதி மொத்தத்தினர்வரலாறு நமது நண்பர்களுக்கு இனிமையாகற்பாலதாம்.

இப்பொழுது பிரபலமாய் இந்தியாவில் பரவியிருக்கும் ஆரியரும், பிரஸ்தாபிக்க எடுத்திருக்கிற பார்ஸியரும், இதற்கு சமார் 3000 ஆண்டுகளுக்குமுன், ஒரே வம்சத்தினர்களாய், பெர்ஷியாநாட்டில் வாழ்ந்துவந்தனர், அக்கியே பரதெய்வமென நம்பி ஒழுகினர், இல்வாழ்வான் எக்கருமம் செய்யினும் ஔபாஸனம், அக்கிபூஜை முன்னிட்டே நடக்கக்கடவன், என நம்மவர் ஒழுக்கம் அக்காலம்தொட்டு வழங்குவதினாலேயே, இச்சங்கதி விளங்கும். பிற்பட்டு, இந்தியவாரியர் என ஓர் பகுதியர், பிரிந்தனர், கீழ்திக்குநோக்கி இந்தியாவில் பிரவேசித்து, ஆப்கனிஸ்தான், ஸிந்துநதி நாடுகள், கங்கைக்கரை நாடுகள், பங்காளம், தேன் இந்தியா இப்பிரதேசங்களில் படிப்படியாய் காலாவட்டத்தில் தரித்தனர் எனவும், ஐரோப்பிய ஆரியர் என மற்றொரு பகுதியர், மேற்குத் திக்குநோக்கிச்சென்று ஐரோப்பாக்கண்டத்துப்பல நாடுகளில் பரவி இக்காலத்து ஐரோப்பிய ஜாதியர்கள் பலர்களாய் வாழ்கிறார்கள் எனவும், சமயக்கொள்கைகளும், அவரவர் பேசும் பாஷைகளின் முறைகளும் பொதுப்பட்டிருப்பதினால், ஏற்படுகிறது. இவ்வாறு ஆரியர் இருதிறத்தினர்களும் பிரிகையில், தாம் பிரியாமல், இப்பார்ஸியர், ஊரிலேயே தரித்து நின்றவர்கள், இங்ஙனம் இவ்வுரையில் கூறப்படுகிறவர்கள்.

பேர்ஸியா, எக்காலிலும், சீர்ப்பட்டநாடு, ஆதியில் டேரையஸ் முதலான பேரரசர்களால்ஆளப்பட்டது, ஐரோப்பாவில் க்ரேக்கரை எதிர்த்த நாடு, ஈஜிப்டருக்கு ஈடுஜோடானது. இப்பெர்ஷியரில், ஸாஸானிய வம்சத்தினர் (Sassanian Dynasty) வலிமை பெற்று பிற்காலங்களில் ஆண்டுவந்தனர் ; இவர்களே தலை அரசர்கள், இவர்களுக்குக் கீழ்ப்பட்டு, அங்கங்கே சிற்றரசர்கள் எந்நாளும் உண்டு. தலையரசர் சிற்றரசர்கள் யாவரும் குடிகளும், ஔபாஸன

முன்னிட்ட ஸமயத்தினர்கள், இவர்களுக்கு வாழ்ப்பயனை இடையூறு நேரிட்டு, ஊர்விட்டு, வெளிப்பட்டு நமது இந்தியாவை அடைந்து, பழைமையில் கூடி இருந்தவாறே, மறுபடியும் இந்திய ஆரியர்களுடன் சேர்ந்து வாழும்படி ஈசர் நியமித்திருப்பதாய்த் தோன்றுகிறது.

கிறிஸ்தவசகம் (A. D.) 570 ல் இந்தியாவில் சமணர் பௌத்தர்கள் மொய்த்திருந்தகாலம், ஆதிசங்கரர் அவதாரம் செய்யவில்லை, ஸ்ரீஞானசம்பந்தர் காலமாயிருக்கலாம், பழைய ஆழ்வார்கள் ஒரே ஈசனை வாழ்த்திய காலமாயுமிருக்கலாம். அரபியாவில், ஹ்ஜ்மகமத், மெக்காவில் அவதரித்தனர். தெய்வம் ஒன்றே, மானிடரில் ஜாதி வித்தியாசம் வைப்பது கடும்பாவம், எனக்கடைப்பிடித்து, கோரான் மகமதியச்சமயம், ஏற்பட்டன. மகமதியர், முதல்முதலில், கடவுளை வழிபடுவதைத் தவிர, வேறு சிந்தை யில்லாதிருந்தனர். மகமதியர் கணக்கு ஜாஸ்திப்பட்டு, திக்குவிஜயம்செய்ய ஆசை பிடித்துப், பலநாடுகளிலும் பரவி, கோரானை நம்பிப் பிழைத்தால் பிழைக்கலாம், இன்றேல் மரணம், எனக்கர்ச்சித்து, ஐரோப்பா ஆப்ரிக்காகளிலும், பெர்ஷியா, ஆப்கானிஸ்தான், இந்தியா, பர்மா இந்த நாடுகளிலும், வியாபித்து, அங்கங்கே மகமதிய துரைத்தனங்களை நாட்டி சனங்களை மகமதியராக்கினர்; இவ்வாறு மாறிய பலதேசங்களில் பேர்ஸியாவும் ஒன்றாச்சுது. கி. பி. 640—642-க்கு மகமதியர்க்கும், பழமையாய் பேர்ஸியாவில்ஸாஸானிய குலத்தரசர் யஸ் டி ஜேர்ட் (Yesde gerd) என்பவர்க்கும் சச்சரவு வுண்டாகி நிஹாவண்ட் (Nehavand) என்ற ஊரில் கடைசியாய் போர்நடந்து, பெர்ஷியர் கட்சி தோற்று, இக்காலத்தில் எப்படியோ, அப்படியே அக்காலத்திலும் நாட்டுக்குள்பட்ட பல சிற்றரசர்களால் ஆதரிக்கப்பட்டிருந்து, காலிப் ஓமார் (Caliph Omar) என்ற அரபிய அரசரால் சிங்காசனத்திலிருந்து நீக்கப்பட்டு, பிற்பாடு யாஸ்டிஜர்ட் கொல்லப்பட்டார். சிற்றரசர்கள் கலகப்பட்டு ஸாஸானியர் துரைத்தனம் சிதைந்தது. இவர் மாய்ந்தநாள் துவங்கி பார்ஷியர் சகம் ஒன்று கணக்காய் வருகிறது. அந்தச் சமயத்தில் பார்ஸியக் குடிகள் மகமதியச் சமயத்தில் சேரச் சம்மதிக்காமல் தம் நாட்டைத் துறந்து வெளிநாடு தேடிப் புறப்பட்டுக் கப்பல் தயார்செய்து கடல்கடந்து வழியில் புசல்சேர்ந்து, கடலில் முழுகிப் போகும்படி இருந்து, கப்பலில் அனைவரும் ஒருமித்து, இடர் நீக்கும் இறைவா! நங்களைத் தப்பவைத்து இந்தியாக்கரை சேர்ப்பரேல், திரும்பியும் அக்கினிக்குண்டம் மூட்டி இந்தியாவில் வழிபடக் கடவோம் என வேண்டியதின் பேரில் புசல்அடங்கி, இந்தியாவில் சூரத் பட்டணத்துக் கடுத்த ஸஞ்சன் துறையில் பெர்ஷியர் இறங்கப்பெற்றனர். இறங்கியோர்க்கு முக்கிய தலை குருவான டஸ்டர் டாராம் என்றவர் அவ்வூருக்குதலைவரான ராணுவிடத்தில், குடியிருக்கவிடை இரந்தனர். பெற்றனர். கடலில்முறைசெய்தவண்ணம் அக்கினிபூஜை நிறைவேறியது. ஔபாஸனக் கடவுளைவிடக்கூடாது என பேர்ஸியாவை விட்டு, இவர்கள் இந்தியாவை அடைந்து, பம்பாயில் விர்த்தியாய் நாளதுவரையில் கீர்த்தியாக பார்ஷியர் வாழ்கிறார்கள். இங்கிலண்ட் சீமையில் ப்ராடஸ்டண்டு ஸமயத்தார் ஹிம்சை பொறுக்காமல், தம்ஸமயத்தை எப்படியாவதுகாப்பாற்றிக்கொள்ள அக்கரைப்பட்டு அமரிக்கா காடுகளில் குடியிறங்கி, அமெரிக்கா திருந்தி, அமெரிக்கா மேன்மை யடைந்திருக்கவில்லையா. கொடிய அரசாட்சி அழியும், நன்னெறிப்பட்டார் ஓங்கி வாழ்வர். இவ்வாறு பார்ஷியர் பெரும்பாலார் விலகியும், அப்பிராந்தியத்தில் (Yazd) யஸ்ட் என்ற ஊர் என்று இன்னும் இருக்கிறது, 2000-குடும்பித்தனர், ஔபாசனக் கடவுளைப் பேணுவோர், மகமதியராகாமல் அங்கு இன்றைக்கும் குடியிருந்து வருகிறார்கள். கீழே உதகரிக்கும் சங்கதிகள் பம்பாயில் வாழும் பார்ஷியரைப் பற்றியவாம்.

நடை, உடை பாவனைகள்.—தர்மநினைப்பு, தர்ம வேலைகள், தர்ம சாலைகள் இவற்றிற்கு விசேஷமாய் பொருள் உதவி நடத்துவர், அவர்களில் ஏவனாது பிச்சை யெடுப்பான் கிடையவே கிடையாது. வர்த்தகச்சார்த்தகங்கள் நடத்தியே பிழைப்பவர். நாடு நாடாய் வெளிப்பட்டு விசேஷப்பொருள் சம்பாதிப்பவர். தம் ஊர்களில் பயிர்மூல ஜீவனம் செய்வாரும் அநேகர் உண்டு. தாம்ஸௌகமாய் வாழவேண்டியதற்கு எவ்வளவு செலவிடவும் பின்னடையார். புருஷர்கள் வெள்ளைக்கார துரைகளைப்போல உடுப்பு போடுவர், தலைப்பா உச்சியில் சாய்வாய் உயர்ந்திருக்கும், கட்டையால் செய்ததுபோல வர்ணம் தடவியிருக்கும்; பெண்பாலரோ, புடவை உடுப்பது உண்டு, உள் அங்கி உண்டு, பாதரக்ஷையுண்டு, தலைப்போர்வை முக்காடு உண்டு, ஆண் பாலருடன் சரிசமானமாய் நடப்பார். பட்டுதுணி உடுக்க ஆசைப்படுவர், புருஷரைப்போலவே படிப்பவர், படிப்பாளிகளாயவர் இவ்வளவு இருந்

தும் இல்லறத்தைப் பராமரிக்கார். இந்தியர்களைப் போலவே இறைச்சி, சோறு, கறிகாய், பலகாரங்கள் சாப்பிடுவர், காரம் தின்பர், ஐரோப்பியர் சாப்பிட இவர்கள் செய்து ஐரோப்பாவுக்கு அனுப்புகிற ஓர் தினுசு சட்னிக்குக் காலாக்கி (Hell Fire) என விலாஸம் போட்டிருக்கிறார்கள்.

சமயமும் தெய்வ வணக்கமும்.—அக்கினியே கடவுள். வீடுகளில் அணையாத குண்டம் நடைபெறும். வெருவாய்ச் சந்தனக்கட்டையே போட்டு எரிப்பர். அக்குண்டம் அறை மடியறைபாலம், தீட்டுப்படாமல் பார்க்கப்படும். பிதிர்தினம், விசேஷதினம்: பிதிர் பூஜை முக்கியமான கடமை. (பிதிர்களைப் பூஜியாமல் இந்தியர்கள் வீட்டில் எதுவும் நடக்கக்கூடாது என்று உண்டு). அஹுராமஸ்டா (Ahuramazda) ஈசர்க்குப்பெயர். சாருத்ரா (Zaruthra or Zoraaster) ஸொரோஸ்டர் என்ற குருவின் சட்டத்துக்கு அடங்கி ஒழுகுவர். (Zend Avesta) ஸென்ட் அவஸ்தா அவர்களுக்கு வேதமாவது. (Zend) ஸென்ட் என்னும் பழைய மொழியில் அவ்வேதம் சொல்லப்பட்டிருக்கிறது, மந்திரங்களை ஸென்டில் சொல்லிப் பிற்பட்டு ஸம்ஸ்கிருதத்தில் மந்திரங்களைக் கலந்துகொள்வது முண்டு, ஊர்களில் அக்கினி ஆலயம் (Temple of Fire) எனக் கோயில்களுண்டு, சிறுவயதில் பெண்களையும் மணப்பதுண்டு, ஆள் ஆனபிறகும் மணப்பர். மௌனமேடை (Tower of Silence) என்னும் மேடை உச்சியில் செத்தவர்கள் பிணத்தை பறவைகள் கொத்தித்தின்னும்படிக் கொண்டுபோய்ப் போட்டுவிடுவர். (திருவள்ளுவநாயனார் இப்படியே மயிலாப்பூரில் அடைந்தாராம்.) தோல் சதைகளைப் பறவைகள் கடித்துத்தின்ன பின்னர், எலும்புகள் மாத்திரம் கண்ணிட்ட இரும்புகம்பில் பாய்கள் வழியாய் கீழே ஆழமான கிணற்றில் விழுந்துவிடும். புரோகிதர் என ஓர் பிரிவு உண்டு. புரோகிதர் பொதுவாய் அறிவினர்களாய் இருப்பர். ஆண்பிள்ளைகளுக்கு பூநூல் போட்டு மந்திர உபதேசம் பண்ணுவது சம்ஸ்காரங்களில் ஒன்று. வேதத்தில் யஸ்நா என்னும் புத்தகத்து 72 அதிகாரங்களுக்கு ஒப்ப 72 நூல் பிரி சேர்த்து முறுக்கிய கயிறை இடிப்பில் போட்டிருப்பர், கோமேயம், பசுவின் மூத்திர நீர் எத்தீட்டுக்கும் பரிசுத்தம் செய்யத்தக்க பொருளென உடம்பில் எடுத்துத் தேய்த்துக் கொள்வர்.

ஆள்கணக்கு, தொழில்கணக்கு.—பம்பாய்ப் பக்கங்களில் சமார் 72065 பேர்கள் வசிக்கிறார்கள், பெர்ஷியா முதலிய வெளிநாடுகளில் சுமார் 8499 பேர்கள் வசிக்கிறார்கள், மொத்தமாக 82000 பார்ஸியர் ஜீவிக்கிறார்கள்.

பம்பாயில் 50 கடைகள் நடக்கின்றன. இவற்றில் சில கோடிக்கணக்கான முதல் கொண்டுடையது. கல்கத்தாவில் 14, சீனாவில் 20 கடை. மதிராஸில் பிராம்ஜி பேஸ்டன்ஜியர் நகைக்கடை மவுண்டுரோடிலும், ஹைகோர்ட்டுக்கு எதிர்த்த கட்டடத்தில் பாடல் கம்பெனி, இன்னும் இரண்டொரு கடை இவைகள் நடக்கின்றன. பம்பாய் ஸேத்துகளைப்போலவே, கடையிலேயே குடித்தனம் இருப்பர். சீமையில் லண்டனிலும் கடைகள் நடக்கின்றன.

இவர்களில், தாதாபாயி நௌரோஜியர் (Dadabay Naoroji) விருத்தாந்தம்.—இவர் வயதான கிழவர், லண்டனிலிருந்து இந்தியர்களுக்காக உழைத்து இந்திய ஜனங்களுக்கு இங்கிலீஷ் துரைகள் விசேஷநன்மை செய்யும்படி இங்லண்ட் மகாஜனங்களைத் தூண்டிக் கொண்டிருந்தார், இந்தியாவுக்கு "தாதா" என்னும் பெயர் படைத்தவர், தம் சொந்தப் பொருள் விரயம் செய்து வருகிறவர், லண்டனில் அநேகப் பெரிய துரைகளுடைய துணைபெற்றுப் பாடுபட்டு வந்தவர். இப்பொழுது வியாதியால் கஷ்டமடைந்து தன் தாய் நாடாகிய இந்தியாவில் தன் சொந்தவீட்டிலிருக்கிறார்.

ஸ்ரீ ஜெம்ஸெட்ஜி நஸர்வான்ஜி டாடா (Sri-Jamesetji Nassarwanji Tata) விருத்தாந்தம்.—இவர் இறந்துபோய் இப்போதைக்குச் சுமார் 5-வருஷம் ஆகிறது. இந்தியாவுக்கு எவ்வளவோ உழைத்தவர்; பம்பாய் நூல் நெசவு, ஆலைகள் நடக்க விசேஷமாய் வேலை செய்தனர்; கடைசியாக மத்தியமாகாணத்தில் (Central Provinces) நாகப்பூரில் எம்ப்ரஸ் மில்ஸ், 'சர்க்கரவர்த்தினிஆலை' (Empress Mills) என இரும்புஆலை வேலை வைத்திருக்கிறார். இதற்காக ஐரோப்பா, அமரிக்கா நாடுகளைச் சுற்றிப் பார்த்து வந்தார், தம் குடும்ப ஆஸ்தியையும் பங்குக்காரர்கள் வைத்திருக்கிற பொருளையுங்கொண்டு

வேலை நடக்கிறது, அமெரிக்காவில் (Steel trust) எகுசமாஜத்தார் வேலைக்குப் போட்டியாய் வேலை நடக்கிறது, சாயும் வேலையைப்பார்த்தால் வெளிநாட்டார்க்கு இந்தியாவிலிருந்து வெகுவிசேஷமாய் போகப்போகிறதாய் இருக்கிறது. இவர்இறந்துபோம் முன்னிலையில் சுமார்-30 லக்ஷரூபாய் ஆஸ்தியை இந்திய கவர்மெண்டார் வசப்படுத்தி அதன் வரும்படியைக்கொண்டு, நூல் ஆராய்ச்சிப் பாடசாலை (Research Institute) களைநடத்தும்படி வற்புறுத்தி, அதற்கு இந்திய துரைத்தனத்தாரும், மைசூர் சமஸ்தானபிரபுவும் இசைந்து, வருஷந்தோறும் பொருள் கொடை செய்யச்சம்மதித்து ஒரு பாடசாலை பங்களூரில் வைக்கப்பட்டு, பாடம் சொல்ல விசேஷ ஆராய்ச்சியுடைய துரைமார் நேமிக்கப்பட்டு, நேர்த்தியான ஆராய்ச்சியில் பாத்திரங்கள் வைக்கப்படும், பி. ஏ. படிப்பில் தேரியோர் விசேஷமாய் ஆராய்ந்து அறியவேலை நடந்தேறியிருக்கிறது.

துவக்கத்தில் நாட்டுக்கோட்டை செட்டிமார்களைப்போல பார்ஸிகள் தர்மக்கருத்துடையவர்கள், என்றேம். அவர் செய்தவற்றிற் சில.

1. பம்பாயில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் வைத்யம் செய்ய (Cama Hospital) காமா என்ற வைத்தியசாலையும், மற்றொரு வைத்தியசாலையும், பாரியான சாலைகள்.

2. மூலலா பிரோஸ் மதிராஸா.

3. ஸர் ஜேம்ஸெட்ஜி ஜீஜீபாய் மதிராஸா.

இவை இரண்டும் பார்ஸி புரோகிதர் வாசித்துஅறிவுள்ளாராக ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்கள்.

இச்சாதியாருடைய முக்கிய கோட்பாடு சிலவாவன:—(1) ஸ்நானம்,பூஜை, போஜனம் இவ்வேளைகளில் மௌனம். (2) பசுவைப் பூஜிக்கவேண்டும், கோமூத்திரம் சுத்திசெய்யும் (3) தடாகம், வாவிகளைப் பிரதிஷ்டைசெய்தல் (4) எவ்வுயிரின் கண்ணும் அன்பு. (5) தினம்—5-தடவை ஜபம். (6) ஆண் பெண் இருவருக்கும் விபசாரம் ஆகாது. (7) பிதிர் பூஜை சடமை யாவது.

T. R. ராமனுத அய்யர், B.A., L.T.

# பி. ஆர். ராஜம் அய்யர் அவர்கள்.

## B. R. RAJAM IYER AVL B. A.

## IV. வாழ்க்கைச் சருக்கம்.

---

### HIS PRIVATE LIFE,

பத்தாவிற்கேற்ற பதிவிரதை யுண்டானல்
எத்தாலுங்கூடி வாழலாம்—சற்றேனும்
தாறுமாறுயிருப்பளே யாமாகில்
கூறுமல் ஸந்நியாஸங் கொள்.

முன்னர் கூறியிருக்கிறபடி ராஜம் அய்யர் இளமைப்பருவத்தில் ஸாதாரணக் குழந்தைகளைப்போல விளையாட்டுக்களை விளையாடினவர் அல்லர். இவர் அப்பொழுதேயே மிகுந்த யோசனையில் ஆழ்ந்தவர் போலக் காணப்பட்டார். வீட்டிலிருந்தவர்களோடு கூட இவர் கலகலப்பாக பழகிவந்ததில்லை. எப்பொழுதும் இவர் எல்லா விஷயங்களிலிருந்தும் ஒதுங்கியே இருந்தார். படிப்பு முதலிய தமது காரியங்களை யாதொரு குறைவுமின்றி இவர் பார்த்துவந்தமையால் இவர் தகப்பனர் இவரது ஒதுங்கிய ஸ்வபாவத்தைக் கவனியாமலே இருந்துவிட்டார். அதிக வார்த்தையாடி கலகலப்பாக இல்லாவிடினும் தமது குழந்தை தடையின்றி முன்னுக்குவந்து பெரிய விஷயங்களை வஹித்து தமது குடும்பத்தைச் சிறப்புப்படுத்துவான் என்று ராஜம் அய்யர் விஷயத்தில் அவர் தகப்பனருக்குப் பூர்ணநம்பிக்கை இருந்தது. இப்படி இருக்கையில் இவருக்கு விவாஹம் நடந்து பெண்சாதி வீடுவந்து சேர்ந்தாள். அவளோடு மாத்திரம் இவர் ஸஹஜமாகப் பழகிவந்தார். நம்மவருள் இருக்கும் ஒழுங்கிற்கு மீறிக்கூட இவர் தமது பெண்சாதி விஷயத்தில் நடந்துகொண்டபோதிலும், இவரிடம் இருந்த நம்பிக்கையால் இந்த மூலமாகவாவது இவருக்குக் கலகலப்பு உண்டாகி குடும்பத்துடன் இவர் ஸஹஜமாகப் பழகும் நிலையை அடையட்டும் என்று எண்ணி அவர்தகப்பனர் அவரைத் தடுக்காது அவர்மனம்போனபடியே விட்டுவிட்டார். ஆகவே பி. எல். பரீக்ஷை தவறினவரையில் ராஜம் அய்யர் ஒருவராலும் தடுக்கப்படாது தமது மனம்போனபடியே உலக இன்பங்களை அநுபவித்துக்கொண்டு படிப்பில் யாதொரு குறைவுமின்றி தமது காலத்தைக் கழித்து வந்தார். இந்தக்காலத்தில் இவர்புத்தி விசாலத்திற்கேற்ப இவர் மனதில் உலகப்பற்றம், பரோபகார சிந்தையும், கற்பனைவிசேஷமும் நிறைந்திருந்தன

பீ. எல் பரீக்ஷை தவறியதும் இவர் மதவிஷயங்களை வாசிக்கத்தொடங்க காலக்கிரமத்தில் ஸந்நாயிஸினியம்மாளிடம் இருந்து உபதேசம் பெற்றார். இதன் பிறகு இவருக்கு மனம் லௌகீக விஷயங்களிலிருந்து திரும்பிவிட பரீக்ஷைப்படிப்பு முதலிய விஷயங்களில் அசிரத்தை உண்டாகி அதிகரித்துக்கொண்டே வந்தது. இதை அறிந்த இவர் தகப்பனார் எவ்வளவோ இவரைக் குறிப்பாகக் கண்டித்து மறுபடியும் கவனமாக பீ. எல் படிப்பைப் படித்துவரும்படி செய்ய முயன்றார். இதுவரையில் ராஜம் அய்யர் குடும்பவிஷயங்களில் கலந்து தமது தகப்பனார் முதலியவர்களோடு ஸஹஜமாகப் பழகாமல் இருந்தபடியால் இவர் தகப்பனருக்கு இவரை நேராக வற்புறுத்திக் கண்டிக்க முடியாமற் போயிற்று. ஆதலால் ராஜம் அய்யர் குடும்பவிஷயங்களில் ஒருவாறு அசிரத்தையாகவே இருந்து தமது மதவிஷயப்பற்றைக் காலக்கிரமத்தில் விருத்தி செய்துகொண்டு வந்தார். இதனால் பரீக்ஷைதேறல், தேசஸஞ்சாரம் செய்து நமது நாட்டை முன்னுக்குக் கொண்டுவர எண்ணுதல் ஆகிய லௌகீக முயற்சிகள் யாவும் இவரைவிட்டு அகன்றன. இவர் பயித்தியம் பிடித்தாற்போல மணிஅடித்தல்முதலியவைகளைச் செய்துகொண்டிருந்த காலத்தில் தமது குடும்பவிஷயம் முதலியவைகளைமுற்றும் கவனிக்காமலே இருந்துவிட்டார். இவ்வாறு இவர் மாறிவிட்டபடியால் இவர் தகப்பனருக்கு இவரிடம் மிகுந்தமனஸ்தாபம் உண்டாயிற்று இவர்விஷயத்தில் முன் வைத்திருந்த நம்பிக்கைகள் யாவும் அவரைவிட்டோட அவர் மனம்உடைந்தவர் போலானார்.

இப்படி இருக்கையில் சாந்தானந்த ஸ்வாமிகளிடம் உபதேசம்பெற்று மனம்தெளிந்த குடும்ப விஷயங்களை ராஜம் அய்யர் உள்ளிருந்தபடியே ஒதுக்கிக்கொண்டு நிஷ்டைபழகத் தொடங்கினார். குடும்ப விஷயங்களை இவர் இவ்வாறு எளிதில் ஒதுக்கிவிட்டபோதிலும் தமது பெண்சாதியின் விஷயத்தைஇவரால் எளிதில் ஒதுக்கமுடியவில்லை. இவர்அவளோடு ஆதியில் ஸர்வ ஸாதாரணமாகப் பழகிவந்ததே இந்தக்காரியத்திற்கு தடையாக ஏற்பட்டது. மனதார இவ்விஷயத்தில் இவருக்கு முன்போன்ற பற்று இல்லாவிடினும், ஒதுக்கும் வழியறியாதவராய், இவர் அவளோடு முன்போலவே பழகிவரும்படி நேரிட்டது. வேறுவிதமாகத் தமது நடத்தையை மாற்றினால் பெண்சாதியுடன் மனஸ்தாபம் உண்டாகத் தமது மார்க்கத்தில் அவள் தடையாக நின்றுவிடுவாளோ என்ற அச்சம் இவருக்கு இருந்ததால், இவர் தமது உள் எண்ணத்தை வெளிக்காட்டாது அவளிடம் மாத்திரம் வெகு தந்திரமாகப் பழகிவந்தார். இந்தக்காலத்தில் தந்திரமாகத் தமது பெண்சாதியை ஒருவாறு திருப்திசெய்துவிட்டு குடும்பத்திலிருந்து கொண்டே ஒதுங்கிநின்று தமது மதவிஷயங்களுக்கு குறைவுவாராமல் நடந்துகொள்ளலாம் என்றநோக்கத்தோடு ராஜம் அய்யர் தமது நடத்தை ஒழுங்குபடுத்திப் பாடுபட்டுக் கொண்டிருந்தார்.

இராஜம் அய்யர் இவ்வாறு தமது நடத்தையை ஒழுங்குபடுத்திக்கொண்டு வருகையில், பிரபுத்த பாரதம் தொடங்கிய மூன்றும் மாதமாகிய 1896-ம் வருஷம் செப்டம்பர் மாதம் இவருக்கு குடற்சிக்கல் நோய் கண்டது. இதனால் இரைக்குழாயின் வேலை தடைபட்டு நின்றுபோக வலி அதிகமாய் விட்டது. மருந்துகளால் குடல்திறந்து மலசுத்தியாகாவிடில் இந்த வ்யாதியை சஸ்திரப் பிரயோகத்தால் அறுத்துத்தான் ஸ்வஸ்தப்படுத்தவேண்டும். அறுத்தால் மனிதன் பிழைப்பது புனர்ஜன்மம்தான். ராஜம் அய்யருக்கு குருவைத்தேடிக் கொடுத்து, அவர் மனதிற்கு இசைந்தவேலையில் அமர்ந்து அதன்மூலமாக ஜீவனத்திற்குக் குறைவின்றி வரும்படி செய்யமனப்பூர்வமாகப்பாடுபட்ட மயிலைப் பிரபுக்கள் தாமே வைத்தியர்களாகவும் மருந்துச் சாலை உடையவராகவும் இருந்தபடியால், இந்தக்கொடிய வ்யாதிகண்டதும், ராஜம் அய்யருக்கு வேண்டிய சிகித்ஸைகள் செய்து தகுந்த மருந்துகளைக் கொடுத்து தக்கஸமயத்தில் உதவினர். இந்தவியாதி வெகுவேகமாயிருந்த சிற்சில ஸமயங்களில் அவரை எல்லோரும் போய் விட்டனர் என்றே மதித்துத் துக்கிக்கலாயினர். இத்தகைய அபாய ஸமயங்களிலும் ராஜம் அய்யர் மனவருத்தப்படாமல் வெகு ஸாதாரணமாக இருந்து, அவருக்கு ஸஹாயமாக அருகில் இருப்போரைஅடிக்கடி கடிந்து கொண்டு வருத்தாது மிகுந்த அமைதியோடிருந்தார். அவர் வயதில் சிறியவராயினும் நடத்தையில் ஒரு பெரியவரைப்போலக் காணப்பட்டார். ஸுகமாக இருக்கும்பொழுது எல்லோரும் வாய் ஓய ஞானம் பிதற்றலாம். இன்னும் வேறு சிலர் தமது நெருங்கின உறவினர் வ்யாதியால் வருந்துங்காலத்தும் அல்லதுஇறக்கும்படி நேரிட்டகாலத்தும் தாம் கற்றஞானத்தை மன

னபலத்தால் தக்க ஸமயத்தில் உதவும்படி மனதிற்குக் கொண்டுவந்து துக்கத்தை எழவொட்டாது அடக்கித் தீரராக விளங்கலாம். ஆனால் தனக்கே வ்யாதிவரும்பொழுது கஷ்டம் அதிகமாகுங்காலத்தில் தான் கற்ற ஞானத்தை முன்கொண்டுவந்து மனம் குழம்பாது திடமாக நிற்றல் அரிது! அரிது! ராஜம் அய்யர் இவ்விதம் அருமையான குணதிசயம் வாய்ந்தவர், கேவலம் வாசாஞானியல்லர், என்பதை உள்ளங்கை நெல்லிக் கனிபோல அறிந்த பிரபுக்களுக்கு இவரிடம் இருந்தமதிப்பு அதிகரித்தது. இதனால் மிகுந்த சிரத்தையோடு ஔஷதாதிகள் கொடுக்க மிகுந்த கஷ்டத்தின்பேரில் ராஜம் அய்யருக்கு இந்த வ்யாதி ஸ்வஸ்தமாயிற்று.

இந்த வ்யாதியால் ராஜம் அய்யருக்கு சிற்சில நன்மைகள் உண்டாயின. இதுவரையில் தம் பிள்ளை தம் எண்ணப்படி பெரிய பரீக்ஷைகள் கொடுத்துப் பெரிய வேலைகளில் அமர்ந்து தமது குடும்பத்தை கௌரவமாக காப்பாற்றி விளங்காமல் போய்விட்டானே என்ற வருத்தம் இவர் தகப்பனருக்கு அதிகமாக இருந்தது. இந்தவ்யாதி காலத்தில் மயிலைப்பிரபுக்கள் புரிந்த உதவியையும், இவரைப் போஷிப்பதற்கு பிரபுத்தபாரத விஷயத்தில் அவர்கள் பாடுபட்டு வருவதையும், அந்தப்பத்திரிகை யாவராலும் நன்கு மதிக்கப் பெற்று ஏராளமாகச்செலவாகி வருவதையும் கண்டவுடன், ராஜம் ஐயர் தகப்பனருக்கு இவரிடம் இருந்த மனஸ்தாபம் வரவரக்குறைந்து கொண்டே வந்தது. இவர் முன்போலத் தமது பெண்சாதியிடம் உல்லாஸமாக இல்லாவிடினும் அவள், 'இது வ்யாதியால் உண்டானது. என்னிடம் இவர் முன்போல் உல்லாஸமாக இல்லாவிடில் என்ன? இவர் பிழைத்தாரே இதுவே எனக்குப்போதும்' என்று எண்ணி ஒருவாறு தேறி இருந்தனள். இதனால் வியாதி வந்தபின்பு கொஞ்சநாள் வரையில் உலக விஷயங்களிலிருந்து முற்றும் ஒதுங்கி, சாந்தானந்த ஸ்வாமிகள் எடுத்துக்காட்டி ஒழுங்கின்படி நிஷ்டை பழக இவருக்குத் தருணம் வாய்த்தது. இதுவும் அல்லாமல் இந்த அபாயமான வ்யாதியிலிருந்து தாம் பிழைத்ததும் ஏதோ ஒரு சிறந்த வேலையை முடிப்பதற்காகக் கடவுள் தம்மைப் பிழைப்பித்தார் என்ற நம்பிக்கை ராஜம் அய்யர் மனதில் உண்டாக வெகு உத்ஸாஹத்தோடு பிரபுத்த பாரத விஷயத்தில் இவர் உழைத்துவந்தார். இதனால் தான் அந்தப்பத்திரிகைக்கு சந்தாதார்கள் 1500-ல் இருந்து முதல் தொகுதி முடிவில் 4500 பெயர்கள் ஆயினர்.

இந்த பிரபுத்தபாரத வேலைக்காகவே வெகு உத்ஸாஹத்தோடு ஸம்ஸ்கிருதம்கற்றுக்கொண்டு ராஜம் அய்யர் உபநிஷத் முதலிய பிரஸ்தானத்ரயங்களையும் தேவபாஷையிலேயே படித்துவந்தார். தமது குரு அன்புடன் வெளியிடும் விஷயங்களை மிகுந்த பக்தியுடன் கேட்டுவரும் சிஷ்யனுக்கு, நல்ல பாஷை நடையில் விஷயங்களை எழுதும் சக்தி யிருப்பின், அவ்விஷயங்களை பிரசுரம் செய்துவர எப்படி உத்ஸாஹம் வராதிருக்கும்? வெகு விசேஷமாக பிரபுத்தபாரதம் 1897-ம் வருஷம் நவம்பர் மாஸம்வரையில் சிறப்பாக நடந்து வந்தது.

இப்படி எல்லாம் சிறப்பாய் நடந்துவர 1897-ம் வருஷம் நவம்பர் மாதம் ராஜம் அய்யருக்கு மறுபடி குடற்சிக்கல் நோய் கண்டது. இது முன் வந்ததை விட அதிக குரூரமாக வந்துவிட்டது. தம்மாலியன்றமட்டும் கொஞ்சநாள் தகுந்த மருந்துகள் கொடுத்துப் பார்த்தபின்பு, ராஜாங்கத்தார் வைத்யசாலைக்குக்கொண்டுபோய்அருத்துத்தான் ஸ்வஸ்தப்படுத்தவேண்டும் என்று பிரபுக்கள் அபிப்பிராயப்பட்டு, ராஜம் அய்யர் உறவினர்களை ஒருவாறு தேற்றி இவரைவைத்யசாலைக்கு எடுத்துச்சென்றனர். அங்கு போனதும்அங்குள்ள ஆங்கல வைத்தியர்'வியாதிஅபாயமானது சீக்கிரம் சஸ்திரப்பிரயோகம் செய்தால் தான் நலம்' என்று சொல்லி ராஜம் அய்யரை அருப்பதற்கு எல்லாவற்றையும் ஆயத்த மாக்கிவிட்டார். அப்பொழுதும் அருக்காமல்இவரைபிழைப்பிக்க முடியாதா என்றுஇவர்உறவினர்குழம்பிக்கொண்டுகேட்க வைத்தியர் ராஜம் அய்யருக்கு ஓர்மருந்து கொடுத்துவிட்டு'எனக்கு இப்பொழுது ஓர்அவஸரவேலைஇருக்கிறதுஅதுஇரண்டொரு மணி பிடிக்கும்.நான்திரும்பி வருவதற்குள் இவருக்குமலசுத்தியாகாவிடில்இவரை அருத்து ஸ்வஸ்தப்படுத்த வேண்டியதுதான்'என்று சொல்லி ராஜம் அய்யர் முதலியோரிடம் விடைபெற்று அவர் தமது வேலையை உத்தேசித்துப் போய்விட்டார். எல்லோரும் மிகுந்த கவலையோடு ராஜம் அய்யருக்கு வேண்டிய சிகித்ஸைகளைச் செய்துகொண்டிருக்கும் தருணத்தில் பகவத் கிருபையால் அவருக்கு மலசுத்தி யாயிற்று. எல்லோருக்கும் மிகுந்த ஸந்தோஷம் உண்டாய்விட்டது. வைத்தியருக்கு உடனே ஸமாசாரத்தைத் தெரிவிக்க அவரும் மிகுந்த ஸந்தோ

ஷத்துடன் வந்து ராஜம் அய்யருக்கு ஆசிகள்கூறித் தமது திருப்தியை வெளியிட்டார். ஸந்தோஷமாக அன்றே ராஜம் அய்யரை பிரபுக்கள் வீட்டிற்கு எடுத்து வந்து ஒரு மாதத்திற்குள் அவரை நன்றாக ஸ்வஸ்தப்படுத்தினர்.

இரண்டாம்தரம் வியாதியிலிருந்து விடுபட்டு ராஜம் அய்யர் வெளிவந்து கொஞ்ச நாளைக்கெல்லாம் அவர் குடும்பத்தில் அதிகரித்த சச்சரவால் அவர் மனோநிலை என்னமாக இருந்தது என்பதை விவரிப்போம். முதலில் வியாதியில் அடிபட்டு வெளிவந்ததும் ராஜம் அய்யருக்குண்டான நம்பிக்கையும் உத்ஸாஹமும் இப்பொழுது உண்டாகவில்லை தமது குடும்பத்தின் நிலையால் இவருக்கு 'நீரில் எழுந்தாகும் யாக்கை' ஆதலால், 'காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற எண்ணம் பலமாய் உண்டாகிக் கொண்டிருந்தது. ஆதலால் காயமதுபொய்: அது நழுவும்முன் முத்திப்பேற்றை அடையவேண்டும் என்ற அடங்கா ஆவல் உண்டாக ஸதாநிஷ்டை பழகுவதிலேயே இவருக்கு மனம் அடிக்கடிப் போகத் தொடங்கியது இந்த ஸமயத்தில் சாந்தானந்த ஸ்வாமிகள் அடிக்கடி சொல்லிவரும்

'கேட்டலுடன் சிந்தித்தல் கேடிலா மெய்த்தெளிவால்
வாட்டமறு உற்பவநோய் மாறுமோ—நாட்டமுற்று
மெய்யான நிட்டையினை மேவினர்க்கன்றோதான்
பொய்யாம் பிறப்பிறப்புப் போம்.'

என்ற தாயுமானஸ்வாமிகள் அருள்வாக்கு அவருக்கு ஞாபகம் வந்துகொண்டே இருந்ததால் இவர் நிஷ்டையில் வெகுகாலம் இருந்துவிடுவார். இவருக்கு உலக விஷயங்களில் ஓர்வித வெறுப்பு உண்டாக அது சாந்தானந்தஸ்வாமிகளது ஸஹாயத்தால் ஒழுங்குபட்டு விருத்தி அடைந்தது, என்பதை இவர் தகப்பனாரும் பெண்சாதியும் அறிந்துவிட்டார்கள். 'இருபத்தாறு வயதிற்குள்ளேயே நமது பிள்ளை அநியாயமாக உலக விஷயங்களைவிட முயலுகிறானே! இது பாழும் வேதாந்தத்தின் வேலையல்லவா?' என்று இவர் தகப்பனார் அடிக்கடி துக்கிப்பது வழக்கம். உண்மைதெரியவந்த இவர் பெண்சாதிமுதலியோரை இவருக்கு தந்திரமாக முன்போல திருப்தி செய்து வருவது மிகுந்த கஷ்டமாகப் போய்விட்டது. ராஜம் அய்யருக்கு இவர்களை திருப்திசெய்வதிலேயே வீட்டில் வீணாகக்காலம்கழிந்துபோக வெளியில் இந்த ஸமயங்களில் ஸ்வாமிகளிடம் சிரவணம் செய்த ஸமயம் தவிர மற்றைய ஸமயங்களில் இவர் குருவாக்யப்படி நிஷ்டையில் இருக்க யத்தனிப்பார். அதற்கும் பிரபுத்தபாரத விஷயம் குறுக்கேவந்து நின்றுகொண்டு இவரை நிஷ்டையில் இருக்கவொட்டாமல் தடுத்தது. நிஷ்டைக்கு இவ்வாறு நாழிகையே மிஞ்சாதுபோனதைக் கண்ட ராஜம் அய்யருக்கு மனம் ஸஹிக்கவில்லை. இதனால் இவருக்கு வர வர பிரபுத்தபாரதத்திற்கு எழுதுவதுகூட மிகுந்த பாரமாகத் தோன்றியது. கடைசி ஆறு ஸஞ்சிகைகளில் இவர் பிரபுக்களது கட்டாயத்தின்பேரிலேதான் விஷயங்களை எழுதிவந்தார்.

இவர் மனம் மேல்நோக்கிப் போவதால் அருமையான பத்திரிகை விஷயங்களைக்கூடக் கவனியாமல் இருக்க இவரை கீழ்நோக்கி இழுக்கும் சக்திகள் இவ்வாறு தொழிற்பட்டன என்பதை விசாரிப்போம். ஒரு காரிய விஷயத்தில் ஒருவன் ஓர் தந்திரத்தை முதலில் உபயோகப்படுத்தி விட்டானாகில் காரியம் முடியும்வரையில் முன்னதற்கு ஏற்ப அநேக தந்திரங்களை அவன் அடிக்கடி உபயோகிக்கவேண்டி வந்துவிடும். காரியம் உலக ஸம்பந்தமான விஷயமாகில் அதனால் அநேக புதிய வியவஹாரங்கள் ஏற்பட்டு அவன் மனதைச் சின்னாபின்னப்படுத்தும். ராஜம்அய்யர் கதியும் இவ்வாறே ஆயிற்று. வீட்டிலுள்ளோரை வெகு தந்திரமாகத் திருப்தி செய்துவிட்டு நிஷ்டை பழக முயன்ற ராஜம் அய்யருக்கு வர வர முன்போலத் தமது தந்திரத்தை எளிதில் உபயோகிக்கமுடியாமல் போயிற்று. தாம் உபயோகித்த தந்திரத்தை மேலும் உபயோகிக்கவேண்டுமாகில் பணம் தமக்கு அதிகம் வேண்டும் என்று இவருக்குத் தோற்றியது. பிரபுக்களிடம் அவர் இரண்டொரு ஸமயத்தில் பணவிஷயமாகக் கலந்து பேசிப்பார்த்தார். அவர்கள் தம்மால் இயன்றவரையில் பத்திரிகை விஷயத்திலிருந்து பணம் உதவிப்பார்த்தனர். அதுவும் இவர் தந்திரங்களுக்குப் போதாமல்போக, இவர் திரவ்யார்த்தம் பிரபோத சந்திரிகை என்றொரு தமிழ்ப்பத்திரிகையைத் தொடங்க யத்தனித்தார். அதற்கு இவர் பிரபுக்களின் இஷ்டத்திற்கு விரோதமாகவே ஆங்கிலத்தில் முந்நோக்கையும் எழுதி வெளியிட்டார். என்னவாறு

லும் பிரபுத்தபாரதத்தின் கௌரவம் இதற்கு எப்படி வரும்? பிரபுத்தபாரதம் ராஜஸ தாமஸ அகங்காரங்கள் ஒன்றும் இல்லாத ஸமயத்தில் வெளிவந்தபத்திரிகை; பிரபோதசந்திரிகையோ கஷ்டநிலையில் திரவ்யத்திற்காக ராஜஸ ஸம்பந்தமாகவெளிவந்த பத்திரிகை. பிரபுத்தபாரதத்திற்கு எழுதுவதே பெரும் பாரமாகத்தோன்றிய இவருக்கு பக்கபல விசேஷத்தால் பிரபோதசந்திரிகையைத் தொடங்கும்படியான கஷ்டம் வரப்பார்த்தது.

குடும்ப விஷயங்களிலிருந்து பரமபதம்பெற முடியும் என்று வீண்பெருமைபேசும் நண்பர்காள்! ராஜம் அய்யர் கதியைப் பாருங்கள், ஒரு தொழில் கஷ்டம் என்று எண்ணி இருந்த இவரை, அந்தோ! அதைவிட அநேக விஷயத்தில் கஷ்டமான தொழில் வந்து கவியப்பார்த்ததே! இந்தத்தருணத்தில் ராஜம் அய்யர் நடத்தையை சிலர் நியாயம் என்று ஸ்தாபிக்க முயலலாம். எப்படி வால்மீகியின் கோபவேளையில் உண்டான சுலோகத்தால் உலகம் உய்யும்படியான ராமாயணம் உண்டானதோ அவ்வாறு ராஜம் அய்யர் உலகஸம்பந்தத்தால் தொடங்க எண்ணிய பிரபோதசந்திரிகையும் உலகத்திற்கு ஓர்பேர் உதவியாக ஏற்பட்டிருக்கலாம் என்பதையும் நாம் அங்கீகரிக்கிறோம். பின்பு வால்மீகி தமது கோபவேளையை உத்தேசித்து பரிதவித்ததுபோல ராஜம் அய்யருக்கு இந்த ஸமயத்தில் மனம் பதைத்திராதென்று எண்ணுகிறீர்கள்? ஒரு பத்திரிகைக்கு எழுதுவதே நிஷ்டைக்கு விரோதம் என்று பட்ட மனம் இரண்டாவதொரு பத்திரிகையை முழுவதும் எழுதி வெளியிடும்படி தூண்டப்பட்டால் எவ்வளவு வருந்தியிருக்கும்! உண்மையில் இவ்வாறு பட்டவர்களுக்கன்றோ இக்கஷ்டம் தெரியும்! அவர் கஷ்டத்தால் நன்மையை அடையும் நாம், வேண்டுமானால், நமது ஸ்வயநயம் கருதும் வழக்கத்திற்கேற்ப அவர் காரியத்தை நியாயம் என்று கூறித் திருப்தி அடையலாம். ராஜம் அய்யர் தந்திரமாகத் தொடங்காமல் நேர்மையாகவிருந்து நிஷ்டை ஸாதித்திருப்பாராயின் இந்தக் கஷ்டத்திற்கு அவர் ஒருநாளும் உள்ளாயிருக்கமாட்டார்.

இராஜம் அய்யர் தேகம் நழுவிய விதத்தை அடுத்த ஸஞ்சிகையில் விவரிப்போம்.

## ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES



"தமயந்தியின் பிரிவு"

"மனதைக்கலக்கி தன் வழிப்படுத்தும்பெருமை உனக்கே உள்ளது. உன்வழிப்பட்டு ஆனந்தப்படுவது எனக்கே உரியது. ஸுகங்களெல்லாம் உன்னால்தான் நான் அடைகிறேன். பெருமை எல்லாம் உன்னால்தான் எனக்குண்டாகின்றது. நீ ஸுகமடையுங்காலங்களில் ஸுகமடையாதிருக்கின்றேன். நீ கஷ்டமடையுங் காலத்தில் நான் ஸுகமாய் இருப்பது நியாயமா? ஸுகமாயிருக்கக்கூடிலும் அதை அனுபவிக்காது என் கணவனது துக்கத்தை நானு மனுபவிப்பது எனக்கு நியாயம். இல்லாவிடில் நான் உன்னோடு அக்நிஸாட்சியாக சொல்லிய வாக்கு தவறாய் விடும்; என்மானம் போய்விடும்; என் நிலைமை போய்விடும்" என்று எவள் தன் கணவனது உருவத் தோற்றத்தை மனதிலெண்ணி அதன்முன்பாக இவ்வாறிருக்க நிச்சயிக்கின்றாளோ அவள்தான் வந்த குலத்திற்கு பூஷணமாக விளங்குவள்.

* * *

மேடையில் உல்லாஸமாக விளையாடி விளையாடி ஓர் அன்னப்பட்சியைப் பிடித்தான். இவன் நிஷத

நாட்டு அரசன். தன் இனத்தாரைவிட்டு அரசன் கையில் அகப்பட்ட அன்னம் தான் தப்பிப்பிழைக்கும் வழியைத் தேடப்பிரயத்தினித்தது. "அரசே என்னை விட்டுவிடு. நான் சென்று விதர்ப்பநாட்டு அரசன்மகளுக்குன்னைப் புகழ்ந்துரைத்து அவளுக் குன்னிடம் ஆசை உண்டாகும்படிச் செய்வேன். அவள் பெயர் தமயந்தி. அழகிற் சிறந்தவள். குணத்தி லுயர்ந்தவள். பொறுமையில் பூமிதேவியை ஒத்தவள். ஹே! நிஷதேச்வர! நளமகாராஜனே! என்னை விட்டுவிடும். உமக்கு மங்களத்தை உண்டாக்குவேன்" என்றது. அதன்மனுஷக்குறலொத்த குரலின் இனிய மொழியை உண்டு மதி மயங்கி அதை விட்டுவிட்டான் நளனும்.

⁂

அன்னம் விதர்ப்பபுரியை அடைந்தது. தமயந்தி இருக்கும் உப்பரிக்கையில் உலாவியது. அதைப்பிடிக்க முயன்றாள் தமயந்தியும்: அவளுக்குக்கஷ்டமிடாமலே அது அவள்கையில்வந்துட்கார்ந்துக்கொண்டது. "நீ இவ்வளவு அழகு வாய்ந்தும் என்னப் பிரயோஜனம். உனக்குத்தக்ககணவன் வந்தாலல்லவா ஸுகம்? எல்லாரும் நளன்போலிருப்பரோ" என்று அன்னம் மனிதக்குறலிற் சொல்லியது. "ஹா! அந்நளன் யார்? எத்தன்மையன்?" என்றாள் தமயந்தி. "நளன் நிஷததேசத்தரசன். வயதிற் சிறியவன். புத்தியிற் பெரியவன். அழகில் மன்மதன். வலிமையிற் அவனுக்கொப்பாவார் யாருமில்லை. அவனை நீயடைந்தாலல்லவா உனக்கும் உன் குணத்திற்கும் தகும்" என்றது. "எப்படியாவது அவரை என்னிடத்து அன்புகொள்ளும்படி செய்வாயானால் உனக்கநேககோடி நமஸ்காரம் நான் செய்வேன்" என்றாள் தமயந்தி. பறவையும் அப்படியே யாகுக என்று சொல்லிப் பறந்தோடியது.

⁂

ஒருவர்மேல் ஆசை உண்டாய்விட்டால் அது தனக்கும் தெரியாமல் விருத்தியாவது ஸ்வபாவம். அதிலும், ஆசை பதியும் இடம் மனோஹரமாயும் இன்பத்தையுண்டாக்கக்கூடியதாயும் இருந்தால்அதுவிருத்தி ஆகாது எப்படிஇருக்க முடியும்? நளன் என்ற உருவையே ஸ்மரிக்கும் தமயந்திக்கு அவன்மேல் ஆசை உண்டாவது ஒரு அதிசயமாகுமோ? நளனுக்கு மவள்மேலன்றி எங்கு மனம்செல்லும்?—அவள் ஒருவளைப்பற்றியே எப்பொழுதும் கவலையாயிருந்தால்? இருவரும் ஒருவர்மேல் ஒருவர் ஆசைக்கொண்டுவிட்டார். ஒருவரை ஒருவர் பார்த்ததில்லை. பார்த்துவிட்டால் அவ்வாசை எவ்வாறு கொழுந்துவிட்டெரிந்துப் பிரகாசிக்குமோ அதைச் சொல்லுவானேன்?

தமயந்திக்கு வயது நிறைந்து, பக்குவமாகிய கனியைப்போல் கண்டார்மனதை யிழுக்கும்படி அழகொடு விளங்கினாள். அவள் தகப்பன் அவள் மணத்திற்காக ஸ்வயம்வரம் நாட்டினான். நாட்டிலுள்ள அரசர்களையெல்லாம் தரிவிக்கும்படிச் செய்தான். தமயந்திக்கு நளன் ஒருவன்மேல்தான் மனமெல்லாம் நிலைத்தது. அவன் ஒருவன்மேல்தான் அன்பெல்லாம் வடிந்தது. ஆசை நோயில் விளங்கியவர்க்கு தாம் ஒருவர்மேல் ஆசைகொண்டு விட்டால் அவன் குரூபியாகவிருந்தாலும் அவனை மன்மதனைப் பாவிப்பது வழக்கம். அதிலும் அழகாகவே அவர் இருந்துவிட்டால் என் அது கொழுந்துவிட் டெரியாதிருக்கும்? தமயந்தி நளன் என்னும் அமுதத்தை அடைவதாய் நிஸ்சயித்துவிட்டாள்

⁂

நாம் ஒரு காரியஞ்செய்ய நிஸ்சயித்தால் அதை நாம் செய்தால்தான் நமக்கு கௌரவம். அதில் நடுவில் பல கஷ்டங்கள் அடையலாம். நாம் அவைகளை லக்ஷியம் செய்யக்கூடாது. அவைகள் நமக்கு மேன்மையைச் செய்யவந்த துணைகளாகவெண்ணி நம்மைக் காத்துக்கொள்ளவேண்டும். இதில் அவரவர் அவ்வவர் புத்திக்குத் தக்கவாறு நடந்துக்கொள்ளுவார்கள். அதில் ஸரியாக நடப்பதுதான் பெருமை.

⁂

நாரதர் தேவலோகஞ் சென்றார். பூலோகத்தில் தமயந்தியின் ஸ்வயம்வரம் நடக்கப்போகிறதென்றார். அவள் யாரையும் மணக்காது நளனையே மணப்பதாக நிஸ்யத்திருக்கிறார்கள், என்றார். அஷ்டதிக்குப் பாலகர்களெல்லாம் நாங்கள் சென்றுப் பார்க்கவேண்டுமென்றார். விதர்ப்ப நகரத்திற்கு புறப்பட்டுவிட்டார்.

⁂

ஸத்தியவான் என்றால் எலலார்க்கும் பொறாமை அவனிடத்துண்டாவது ஸ்வபாவம். அவனைப்பொய்யனாக்கவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொள்பவர்கள் சிலர் உண்டு. அதில் தேவர்கள் தேர்ந்தவர். மனிதருக்கும் தேவருக்கும் ஒருபேதமுண்டு. மனிதன் கெடுதிசெய்ய ஆரம்பித்தால் எப்பொழுதும் கெடுதி செய்வான். தேவர் கெடுதியடைந்தவன் நல்லவன் என்று பரீக்ஷையால் தெரிந்தாலுடனே அவனை ஆதரிப்பார்: மேன்மைபடுத்துவார். இது ஸகஜம் இதுதான் மனிதனுக்கும் தேவருக்குமுள்ள தாரதம்யம்.

நளன் தமயந்தி ஸ்வயம்வரத்திற்கு போய்க்கொண்டிருந்தான். வழியில் தேவர்கள் இவன் போவதைக்கண்டார்கள். நளனுடைய குணத்தைப் பரீக்ஷிக்கவேண்டுமென்று நினைத்தார். தாம்வரும் விமானத்திலிருந்துக் கீழிறங்கினார்கள். நளனைக்கண்டு "நங்கள் இந்திரன், குபேரன், வருணனன், யமன் என்று பெயர்க்கொண்டவர்கள் தமயந்தி ஸ்வயம்வரத்திற்கு வந்தோம். அவளை மணக்க வேண்டும் என்று ஆவல் கொண்டிருக்கிறோம். நாங்களிவ் வெண்ணத்தோடு வந்ததாக தமயந்திக்குச் சொல்லி எங்களை மணக்கும்படி சொல்வாய்" என்றார்கள்.

***

தர்மவானுக்கு எப்பொழுதும் பிறருக்குதவி செய்யவேண்டும் என்பதே ஸ்வபாவம். தன்னுடைய காரியத்திற்கு ஹானி வருவதாயிருந்தாலும் அப்பொழுதும் பிறருக்குதவியா யிருக்கவேண்டு மென்பதே அவர்குணம். மனுஷஸ்வபாவத்தில் அது கஷ்டமாயிருந்தாலும், தன் ஆசையை அடக்கி உதவிசெய்வது தான்அந்த ஸ்வபாத்தை உயர்த்துவது. இதில் பெருமை அடைவதுதான் ஆத்மானந்தம்.

***

"போயும் போயும் என்னைத்தானா இக்காரியத்திற்கு தூதனாக அனுப்பவேண்டும். நானுமவள் மேலாசை கொண்டவன். அவளுமென்னொருவன் மேல்தான் ஆசைகொண்டாள். அவள் என்னைக் கண்டதும் உங்கள்மேல் ஆசைக்கொள்வாளா? நான் தூதாகப்போவதுதான் சரியா? அப்படி போனாலுங் காவலிலிருக்கும் அந்தப்புரத்திற் செல்வதெப்படி? முடியாதல்லவா? வேறு யாரையாவது போகச்சொல்லக் கூடாதா" என்றான் நளன். "எங்களுடையவேலையை செய்யாவிட்டால்உனக்கு தேவகாரியத்தைத் தடைசெய்த பாவஞ்சேரும். உன்னுருவம் அவளுக்குத் தவிர மற்றவர்க்கு தெரியாமலிருக்கும்படிச்செய்வோம். நீ தான் சென்று அந்த தமயந்தியை எவ்வாறேனும் எங்களிலொருவரை மணக்கும்படிச்செய்யவேண்டும். தமயந்தி சொல்லும் பதிலை வந்து எங்களுக்கு வந்து தெரிவிப்பாயாக" என்றார்கள். நளனும் தர்மமே துணையாக வென்றக் கொண்டு தமயந்தியிடம் தூதாக சென்றான்.

***

மனஸ்ஸாட்சிக்குத் தக்கவாறு நாம் நடக்கவேண்டியது நமக்கு முதல்வேலை. மனஸ்ஸாட்சிக்கு இது ஸரி இது ஸரியன்று என்று நன்றாகத்தெரியும். ஆனால் மனுஷஸ்வபாத்தில் மனஸ்ஸாட்சி சொல்லுவதை வழிபடுவது தான் கஷ்டமாயிருக்கிறது. இதுதான் மனிதனுக்கு கெட்டபெயரையும் நல்ல பெயரையும் உண்டாக்குவது. வழி பட்டால் நல்லபெயர் அடைகிறான். அதை வழிபடாவிட்டால் கெட்டபெயரை அடைவது நிஸ்சயம். தன் மனஸ்ஸாட்சிக்கு ஸரிஆக ஒருவன் நடந்தால் முதலில் அவன் மிக கஷ்டங்களடைந்தாலும் கடைசில் அழியாப்பெருமையை அந்நடக்கை உண்டாக்கும் என்பது நிஸ்சயம்.

***

"தேவர்கள் உன்னை மணக்க வந்திருக்கிறார்கள் அவர்களை நீ மணக்கவேண்டும் என்று விரும்புகிறார்கள். என்னை இச்சமாசாரத்தை உனக்குச்சொல்லும்படி தூது அனுப்பினார்கள்' என்றான் நளன். இதற்குள் திகைத்துத் தடுமாறி தனக்கும் தெரியாமல் ஒரு விதக்கூச்சமும் மடைமையும் அடைந்தவளாகி வாய்த்திறந்து பேச முயன்றாள் தமயந்தி. முடியவில்லை. கடைசியாக "ஆர்ய! தேவரீர் இன்னார் என்று எனக்குத் தெரியவில்லை. மனம் ஸந்தோஷத்தையும் கஷ்டத்தையும் அடைகிறது. உம்மைக்கண்டால் நிஷதபதியாகத்தான் இருக்கவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. இல்லாவிடில் எனக்கும் தெரியாமல் இந்நடுக்கமும் ஒடுக்கமும், அச்சமும்கூச்சமும் உண்டாக இங்குக்காரணமில்லை. உம்மிடத்தன்பினால் என் மனமழுந்திய நிலைமையினால்தான் அது இருக்கமுடியும்" என்று தனக்குந் தெரியாமல் தமயந்தி மெல்லியகுரலில் மிகு வணக்கத்துடன் சொன்னாள்.

***

பெண்களுக்கு, எப்பொழுது ஒருவர்மேல் அன்பு செலுத்துகிறார்களோ, அவர்மேல்தான் மனமுழுது நிலைக்கும். அதைப்பிரிக்க எவர் யத்தனித்தாலும் முடியாது. ஸரியான பெண்களின் ஸ்வபாவமிது. மனிதனுக்கு தன் தர்மநிலையிலிருந்து மனஸ்ஸாட்சிக்கு ஸரியாக நடப்பதுதான் அவன்வேலை. பெண்ணிற்கு தான் ஒருவன்மேல் அன்பு செலுத்திவிட்டால் அதனிடத்திலேயே அழுந்தியிருத்தல் தான் அவளுக்குப் பெருமை.

***

"நான் நளன்தான்! ஆயினுமென்ன? தேவர்களுடைய பாததூளிக்கு ஸமானமாகாத என்னை மணப்பதால் என்ன பிரயோஜனம். தேவரை மணப்பது தான் உனக்கும் பெருமை; அவருக்கும் ஆநந்தம். தேவருக்கு அப்பிரியமாக நாம் ஒன்றும் செய்யக்கூ

டாது" என்றான் நளன். "ஆஹா! என்னமொழி களிவை? தேவராயிருந்தாலென்ன, மற்று யாராய் இருந்தாலென்ன? யான் உம்மையே மணப்பதாக எண்ணிவிட்டு மனத்தால் கூடிய பிறகு மற்றொருவரை மணப்பதாக எண்ணங்கொள்வது பாதிவிரத்யமாகுமா? நீர்தான் சொல்லும்? அப்படியே நடக்கின்றேன். நீங்கள் கவலைப்படுவதில் பிரயோஜனமென்ன? நான் அவர் முன்பே உம்மை வரிப்பேன். அப்பொழுது அவர் என் கோபங்கொள்ளுவார்கள்? தருமத்தில் நின்றவர்தானே தேவர்கள். நீங்கள் நான் உங்களையே மணப்பதாகச்சொல்லியதாகச் சொல்லிவிடும்" என்றாள் தமயந்தி.

* * *

மனோதைரிய முடையவர்களைப் பரிட்சிப்பதுமாத்திரம் பெரியோர் ஸ்வபாவம் அல்ல. பரிட்சித்தபிறகு அவர் ஸரியான வழியில் நடக்கிறவர்கள் தான் என்று தோன்றிவிட்டால் இவர்களைப்பெருமைப்படுத்துவது பெரியோர் ஸ்வபாவம். இதனால்தான் எவரும் தமக்கு வருங்கஷ்டங்களை லக்ஷியஞ் செய்யாமல் தமது தர்மத்தை செய்யவேண்டும் என்பது.

* * *

ஸபைக்கு தனக்குவேண்டிய கணவனை வரிக்க தமயந்தி வந்தனள். நளன் என்னுமுருவத்தையே மனதில் தியானம் செய்துகொண்டு வந்தனள். ஆனால் ஒரு நளனை மாத்திரமாக்கண்டாள்! ஐந்து நள உருவத்தைக்கண்டாள். மனத்திலேக்கங்கொண்டாள். தேவதைகள் தன்னைப்பரிட்சிப்பதாக நினைத்தாள், "ஒருபெண்ணை—எளியஸ்திரீயைப் பரிட்சிப்பது தேவதைகளுக்கழகா? தர்மஸம்ஸ்தாபனார்த்தத்தை விரும்புவர்கள் என்தர்மத்தைதடுப்பது நியாயமா? என்மனமார நளமஹாராஜனொருவனையேநான் மணப்பதாக நினைத்தபிறகு நான் அதை விட்டுவிட்டு அற்பஸ்திரீயைப்போல் பொன், பொருள் இவைகளுக்காசைப்பட்டு என் தர்மவழியை விடுவனோ? என்னை மன்னித்து என்உயிராய்விளங்கும் நளமஹாராஜனை அறியும்படி செய்வீராக" என்று தமயந்தி தேவரைத் துதித்தாள். அவரும் அப்படியே செய்தனர். மணம் நடந்தது. தமயந்தியும் நளனும் தம்மூருக்கேகினர்.

* * *

தேவர்கள் தம்மிருப்பிடத்திற்கு புறப்பட்டுபோயினர். வழியிற் சனைஸ்சரன் தமயந்தி ஸ்வயம்வரத்திற்காக வருவதைக் கண்டார். 'ஸ்வயம் வரம் ஆய்விட்டது. நளனைக்காட்டிலும் சிறந்தஸத்தியவானுமில்லை; தமயந்தியைக்காட்டிலு முத்தமஸ்திரீ கிடையாது. அவரிருவர்க்கும் மணமாகியது. யாம் அவனையே எமக்காக தூது போகச் சொல்லிவிட்டு அவனுக்குத் தெரியாது நாமும் போயிருந்தோம்; பலவிதத்திலும் பரிட்சித்தோம். உத்தம குணமுடையவன் தம்பதிகளிருவரும் ஸுகமாக விருக்கட்டும்,' என்றனர் இவர்கள்.

"ஆஹா! நான் வருவதற்குமுன் ஆய்விட்டது! ஸரி அவன் ஸுகமடைவதைப் பார்ப்போம்" என்றான் சனைஸ்சரன். "நீ எதுசெய்யினும் அவன் பெருமைவிளங்குமே அன்றிக் குன்றாது" என்றுக்கொண்டே அவர் ஸுரலோகஞ் சென்றார்.

* * *

சனைஸ்சரன் பிராஹ்மண வடிவத்தோடு புஷ்கர ராஜனிடம் வந்தான். நளனுடன் அவனை ஸூதாடத்தூண்டினான். ஸூதாட்டமாகியது. நளன் தோற்றான். நாட்டைவிட்டுப்போக நேரிட்டது. ஸூதாட்டத்தில் ஸுகமடைந்தவன் எவன்? ஸரி தான் எனப் புறப்பட்டுவிட்டான். தமயந்தியைக்கண்டான். "நான் தோல்வியடைந்தேன், காட்டிற்கு நான் போகவேண்டியது என்கடமை. நான் கஷ்டமடையினும், நீயும் என் கஷ்டமடையவேண்டும், நீ தாய்வீடுசென்று ஸுகமாய் இரு" என்றான் நளன்.

* * *

"எது நான் செய்யினும் என் கணவன் ஆனந்தமடைவதற்குத்தான் செய்வது. அவன் ஆனந்தத்தில் என் ஸுகம் நிலைத்திருக்கிறது. ஆனதினால்தான் அவன் ஸுகத்தில் ஸுகிக்கிறேன். அவன் கஷ்டத்தில் பாதை அடைகிறேன் அவன் சலனத்தில் சலிக்கிறேன். அவன் கஷ்டமடையுங் காலத்தில் நான் ஸுகமடைதல் தகுமா? பேரின்ப மளிக்கும் பெருமானை அடைந்து அவர் கஷ்டமடைவதைக் காட்டிக் கொள்ளில், நாம் நீசர்களைப்போல ஸுகமடையும் காலத்தில்மாத்திரம் ஸுகத்தை அடைந்து, ஏதோ சில எண்ணமுடியாதக் காரணங்களால் கஷ்டம் வருவதாய் இருந்தால், நமக்கு ஸுகத்தை அளித்த கல்பகத்தருவைவிட்டு நாம் விலகுவது தர்மமாகுமா? கணவனுடன் ஒற்றிருந்து அவர் கஷ்டமடையுங்காலத்தில் நாம் தைரியத்தை ஊட்டாது நாம் விலகி இருப்பது நியாயமா? ஸஹதர்மிணி என்ற பட்டமடைந்து அவரடையும் கஷ்டங்களை நான் பங்குக்கொள்ளாவிட்டால் எனக்கென்ன பெருமை? இது எனக்கும் மானக்கேடு. நான் பிறந்த குலத்திற்கும் கீழ்மை; பொதுவில் பெண்பாலர்களுக்கு நான் கோடரிக்காம்பாக விளங்குவேன். அல்லவா? இதெல்லாம் எனக்கு வேண்டாம். என்கணவனுடனிருந்து அவருடைய கஷ்டங்களில் அவரை உத்ஸாகப்படுத்துவேன். இதுபோன்ற வழியிலேயே நடப்பேன். அவருக்கு குறைவராதிருக்கும்படி நடப்பேன்" என்று எந்த பெண் நிஸ்சயிக்கிறாளோ அவள் நிஸ்சயமாக தன் கணவனைப்பற்றிக் கவலைக்கொண்டவளாகிறாள். இது ஸத்தியம்.

"ஆர்ய! பெண்களுக்கு தாய்வீடு விரும்பத்தக்கதன்று; அங்கு அநேகவித ஸுகங்களோடு இருந்தாலும், அநேக கஷ்டங்களை அடைந்து கணவனோடு இருத்தல்தான் தர்மம்; இது உமக்குத் தெரியாதா? என்னைப் பரிட்சிப்பது நியாயமா? சி! தாய்வீட்டாசைகொண்ட பெண்ணும் ஒருபெண்ணோ? அவள், வந்த குலத்தின் புண்தான் ஆகிறாள். அதைப்பற்றி என்னிடத்திற் சொல்லவேண்டாம். நீர் கஷ்டப்பட்டுக் காட்டில் திரியவேண்டும். நான் ஸுகமாக கொஞ்சமேனும் கணவனைப்பற்றிக் கவலை இல்லாது தாய்வீட்டில் வாழவேண்டும். நல்லவாழ்வு! என்னை மன்னிக்கவேண்டும். தயவுசெய்து அப்படி சொல்லாது இருக்கும்படி வேண்டிக்கொள்கிறேன். குழந்தைகளால் காட்டில் நடக்கமுடியாது. ஆட்டம் தோற்றுவிடுமென்பதைக் கண்டு நான் அவரை என் தாய்வீட்டிற் கனுப்பிவிட்டேன். நாம் கஷ்டமடைந்தால் அக்குழந்தைகள் ஏன் கஷ்டப்படவேண்டும். புறப்படும்" என்றாள் தமயந்தி. நளன் ஒன்றும் தோன்றாது நின்றுவிட்டான்.

* * *

நமக்குக் கஷ்டம்வருங்காலத்தில் ஸுகமாகத் தோன்றி பின்பு துன்பமாக விளங்குவது ஸ்வபாவம். இம்மாதிரிக் கஷ்டம்பெரியோர்களுக்கு வந்தால் அதைத் தாம்மாத்திரம் அனுபவிக்கவேண்டும், பிறர் அனுபவிக்கக்கூடாதென்ற எண்ணம் உண்டாய்விடும். தன்னுடைய நெருங்கிய உறவினரும் தன் கஷ்டத்தின் நிலைமையை பாகித்துக்கொள்ளக்கூடாதென்பது ஸ்வபாவம். மனிதனுக்கு இதுதான், ஸ்திரீகளுக்கு இதுதான் ஸ்வபாவம். ஸ்திரீயானவள் தன் கணவன் கஷ்டமடையுங்காலத்தில் அவனுடனிருக்கத்தான் விரும்புவள். அவள் ஏன் கஷ்டப்படவேண்டுமென்பது கணவனைத் தூண்டி அவளவ்வாறு படாமலிருக்கும்படிச் செய்யவேண்டுமென்று அவன் எண்ணுவது அவன் அவளிடத்துக்கொண்ட அன்பைக்காட்டுகிறது.

* * *

காட்டில் நளனுந் தமயந்தியும் நடக்கிறார்கள். சனைஸ்சரன் ஒரு அன்னமாக அவர் எதிரில் பறந்து வந்தனன். தமயந்தி அதைக்கண்டாள். அதைக் கொள்ள ஆவல்கொண்டாள். இடுப்பில் ஒரு வஸ்திரந்தான் நளனுக்கு; தமயந்திக்கும் உடுத்த ஆடை ஒன்றுதான். தமயந்தியின் புடவை முன்றானையைத் தான் கட்டிக்கொண்டு தன் வஸ்திரத்தைக் கொண்டந்த அன்னத்தை பிடிக்க முயன்றான். அவ்வஸ்திரத்தை இழுத்துக்கொண்டே அன்னம் பறந்தோடியது. இன்னம் என்னவேண்டும். உடுத்த ஆடையும் இழந்தான்.

துக்கத்திலும் சந்தோஷம் உண்டு என்பது யார்தான் அறியாதவர். விதர்ப்பபுரத்திற்கு போகும் பாதையைக்கண்டான். "தமயந்தி! இனி உன்னால் நடக்கமுடியாது. இனி உன் தகப்பன் வீட்டிற்குப் போ. இதுதான் ஆவ்வூர்க்கு போகும் வழி" என்றான் நளன். ஸரியானபத்நிக்கு இம்மொழி எப்படி இருக்கும்! படிப்பவர்களே! இதைப்பாரும். தன்னைப்பரீட்சிப்பதாக அல்லவோ அவள் நினைப்பள். கணவனையே லக்ஷியங்கொண்டவளுக்கு கஷ்டமென்று ஒன்று இருப்பதாக அவள் நினைப்பதில்லை." தமயந்தியும் "என்னைப்பரிகாஸம் செய்யவேண்டாமென்று மிகு வணக்கத்தோடு வேண்டிக்கொண்டாள்.

* * *

சில ஸமயங்களில் நமக்கும் தெரியாமல் நாம் சில காரியம் செய்கிறோம். இவைகளை நாம் செய்வதாகவும் எண்ணுகிறதில்லை. இவைகளால் மேல்வரும் அவஸ்தைகளையும் எண்ணாது நாம் செய்து விடுகிறோம். இது ஸமயத்தின் வலிமை என்று சொல்லுவர் பெரியோர். சிலஸமயத்தில் நாம் பலமுறையும் சிந்தனை செய்தது மனதிற் பதிந்து நம்மை அச்சிந்தைக்கு ஆளாக்கிவிடுகிறது.

* * *

கெடுதி செய்ய ஒருவன் உண்டானால் இச்சமயம் ஒருவனுக்கு எப்போதுண்டாகுமென்று காத்திருந்து அச்சிந்தைக் கிணங்கத் தானும் வேலை செய்வது அவன்வழியின் போக்கே அன்றிவேறொன்றுமன்று.

* * *

அவ்வழிக்கெதிரில் வந்துகொண்டிருந்தனர். இருட்டாய் விட்டது. பெருமந்தகாரம். அம்வழிக்கெதிரில் ஒருபாழ்மண்டபம். அதனருகு வந்தார். அதில் இருட்டில் ஒருவரை ஒருவர்பார்க்க முடியாது. இருந்தாலும், மனமொத்தார்போல தமயந்தியும் நளனும் ஒரேபுடவையால் பிணிக்கப்பட்டவராய் அம்மண்டபத்தில், கரடு முரடானதரையில், அந்தகாரத்தில், வெளவாலும் எலியும் கீச்சுகீச்சென்றொலிக்க, சென்றனர். தனது ஆயாசத்தால்தமயந்தி அயர்ந்து தூங்கிவிட்டாள். சிந்தாஃகிராந்தனாய் நளன் "இப்பொழுது இப்புடவையிற் பாதியை நாம் கிழித்து சென்றால் இவ்வழிவிதர்ப்பபுரிக்கு போகுமென்றவள் அறிவள். அவள் போவள்" என்று நினைத்தான். அவ்விருளில் பிரகாசிக்கத்தக்க கத்தியாய் வந்து நளன் கையில் விளங்கினான் சனைஸ்சரன். புடவையைக் கிழித்தான், நளனும் அவளைவிட்டு பிரிந்தான். அவள் நித்ரையை பங்கப் படுத்தாமலேபிரிந்துவிட்டான்.

* * *

காடார்ந்தகாரத்தில் ஒன்றும் தெரியாது தமயந்தி தூங்குகிறாள். அவள் ஸுகமாகத் தூங்கட்டும். பின்படும் கஷ்டங்களையும், ஸுகத்தையும் "பிரிந்தவர் கூடினால் பேசல் வேண்டுமோ" என்ற தலைப்பின் கீழ் எழுதுவோம்.

வா. சேஷகிரிசாஸ்திரி.

# சிறுவர்க்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

உண்மை:—எப்போதும் உண்மையே பேசவேண்டியதென்று பெரியோர் சிறியவர்களுக்குப் பல தடவை சொல்லிவருவார்கள். உண்மை உயிரைவிடச் சிறந்ததென்று நினைக்கவேண்டும். ஆனால் பொய்பேசி வழக்கமாய்விட்டால் பிரகு அந்த கெட்டவழக்கத்தை மாற்றிக்கொள்ளுதல் கடினமாகும். ஆகவே பழக்க வழக்கங்கள் எல்லாம் நல்லவைகளாயிருக்கவேண்டும். பொய்பேசுவது கெட்டவழக்கம் என்று சிறுவர்களுக்கு போதிக்கவேண்டியது.

ஒருஸமயம் பொய்பேசிஅதனால் தப்பித்து போகலாமென்று எண்ணுதல் கூடாது. உலகில் எல்லோரும் உண்மைபேசுபவனையே மதிப்பார்கள்: உண்மைபேசுபவனை நன்கு மதித்து அலுவலில் நியமித்துக் கொள்ள யாவரும் விரும்புவார்கள். என்ன கஷ்டங்கள் நேர்வதானாலும் பொய்பேசத் துணியக்கூடாது. பொய் பேசுவது பெரும்பாவம். கண்டு பிடிக்கப்பட்டால் தண்டிக்கப்படுவதோடு பிறகு ஆயுள் பரியந்தம் ஒருவரும் பொய்யனை நம்பமாட்டார்கள்.

இந்து தேசத்தில் அதிக கீர்த்தியுடன் அரசாண்ட சக்கிரவர்த்திகளுள் ஹரிச்சந்திரன் என்பவன் ஒரு பெரிய சக்கிரவர்த்தி. அவன் ஜனங்களிடத்தில் அதிக பிரீதிவைத்து ஆண்டுவந்தான். பெரியவர்கள் வந்தால் அவர்களுக்குத் தக்க உபசாரம் செய்து அவர்களுக்கு வேண்டிய பணிவிடைகளும் செய்துவந்தான். இவனுடையகீர்த்தி தேவலோகத்திற்கும் எட்டியது. ஒருநாள் அங்கே பலர்கூடி பேசிக்கொண்டிருந்த ஸமயத்தில் இவனுடைய குருவாகிய வஸிஷ்டர் இவனது உண்மை நல்லொழுக்கம், முதலியவைகளைபற்றிப் பலரறிய எடுத்துச் சொன்னார். அதைக்கேட்டு எல்லோரும் அதிசயிக்க இவனுடைய உண்மையைப்பரிசோதிக்கவேண்டுமென்று விசுவாமித்திரர் என்ற ஒரு மஹா ரிஷி, எண்ணங்கொண்டார்

அப்படி எண்ணினவர் பூமிக்குவந்து ஹரிச்சந்திரனிடம் சென்றார். அரசன் ரிஷிக்குவேண்டிய உபசாரம்செய்து ஆஸனங்கொடுத்து இருக்கச்சொன்னான். பிரகு அதிக பக்தியோடு அவரைப் பணிந்துதன்னால் அவருக்கு ஏதாவது வேண்டியிருக்குமோவென்று கேட்டான். அந்தமுனிவர் தாம் ஒரு யாகம் செய்யப்போவதாயும் அதற்கு ஏராளமானபொருள்வேண்டுமென்றுஞ் சொன்னவுடன், தனது பொக்கிஷத்திலுள்ள பணத்தையெல்லாங் கொடுத்தான். தமக்கு வைக்க இடமில்லாமையால் அவனிடம் ஒப்பிவைத்துத் தான் பிரகு வந்து வாங்கிக்கொள்வதாய்ச் சொல்லி திரும்பிப்போனார். அப்படிப் போனவர் ஒரு குளிர்ந்த காட்டில் தவம் செய்துகொண்டிருக்கையில், மிருகங்கள் பயிரை யழிப்பதாய்க் குடிகள் அரசனிடம் முறையிட்டார்கள். அரசன் வேட்டையாடி துஷ்டமிருகங்களைக் கொன்று தேசத்திற்கு க்ஷேம முண்டுபண்ண நினைத்து வேட்டையாடும்போது, தற்செயலாய் விசுவாமித்திரர் தங்கிய காட்டிலுள்ள மிருகங்களையுங் கொன்றான். அதற்கு முனிவர் கோபிக்க, தன்மீதுள்ள குற்றத்திற்காக தேசமுழுவதையும் முனிவருக்குக் கொடுத்து மனைவியோடும் மகனோடும் காட்டுக்குச் சென்றான்.

முன்னே இவனிடம் ஒப்பிவைத்த பணத்தை முனிவர் கேட்கத் தன்னிடம் கொடுத்தபொருளைத் திருப்பிக் கொடுக்கமுடியாமல் மனைவியையும் மகனையும் விற்றப் பின்னால் தானும் அடிமையாகப் போய் உண்மையை நிலைநிறுத்தியகதையெல்லாருக்குந் தெரியும். பிரகு உண்மையை உயிரைவிடச் சிறந்ததாய்க்கொண்ட அரிச்சந்திரனுடைய பெருமையை யாவரும் மெச்சி, அவனுக்கு விசேஷ வரங்களைக் கொடுத்தார்கள். ஆகவே உண்மைசொல்லும் விஷயத்தில் எப்படிப்பட்ட கஷ்டங்கள் வருவதானாலும், உண்மையல்லாத பொய்சொல்லவே கூடாது.

முன்னொருகாலத்தில் ரோமாபுரிக்கும், கார்தேஜ் நகரத்திற்கும் ஒரு பெரிய யுத்தம் உண்டாயிற்று.— அந்தயுத்தத்தில் கார்தேஜ் நகரத்தார் ரோமாபுரியிலுள்ள ரெகுலஸ் என்றவரை சிறைப்படுத்திக் கொண்டார்கள். சிலகாலத்திற்கெல்லாம் கார்தேஜ் நகரத்தாருக்கு பலங்குறைய ஆரம்பித்தது. அப்போது ஸமாதானஞ் செய்துகொள்வது நல்லதென்றெண்ணி, அவர்கள் தங்களுக்குக் கைதியாகவுள்ள ரெகுலஸ் என்பவரை ரோமாபுரிக்குத் தூதாக அனுப்பினார்கள். அப்படி அனுப்பும்போது சமாதானம் பேசமுடியாவிட்டால் ரெகுலஸ் திரும்பி கார்தேஜுக்கு வந்துவிடவேண்டுமென்று சொன்னார்கள். அதற்கு உடன்பட்ட ரெகுலஸ் ரோமாபுரிக்குத் தூதாகப்போனார்.

தனது தேசத்தாரை யுத்தத்தை நிறுத்தாமலிருக்கச் சொல்லிவிட்டு இவர் திரும்பிவிட்டார் அப்படித் திரும்பும்போது இவரைச் சேர்ந்தவர்கள் மறுபடியும் கைதியாகப் போவானேன், ஸுகமாக இங்கே யிருந்துவிடக்கூடாதா'' என்று கேட்டதற்கு "என்னுடைய தேசம் சண்டையில் ஜெயிக்கவேண்டுமென்ற ஆசையால் இங்கே வந்து உங்களுக்கு துக்கம் உண்டுபண்ணேன். நான்என்வார்த்தையைத்தட்டாமல்திரும்ப பகைவரிடம் போய்விட வேண்டும். அவர்கள் கொன்றாலும் உண்மை தவறலாகாது" என்று சொல்லிப்போனார். இவர்போனதும் கார்தேஜ் நகரத்தார் இவர் ஸமாதானம் செய்யவில்லையென்று கோபங்கொண்டு இவரை சித்திரவதை செய்து கொன்றார்கள். ஆனாலும், தமது சொல்லைக்காத்து உண்மையாய் நடந்துகொண்டதால் இவரதுபெயர் எப்போதும் சரித்திரத்தில் புகழோடு விளங்குகின்றது.

உண்மை பேசுபவர்களுக்கு ஒருபோதுங் குறைவு வராது. அவர்களுக்கு எந்த விடத்திலும் பெருமையே உண்டாகும். ஆகவே பொய் பேசாமல் வாழ்வதே நலம்.

# விசேஷ வர்த்தமானங்கள்

## GENERAL NEWS

பாங்குநெல்:—இது சிலவருஷங்களுக்கு முன்னால் மத்திய மாகாணங்களிலிருந்து இவ்விராஜதானிக்கு நூதனமாய்க் கொண்டுவரப்பட்ட ஒரு தினுசு நெல். அது வெண்மையான நீண்ட நேர்த்தியான மெல்லிய அரிசி யுடையது. ஆகையால் அது நாகரீகம் மிகுந்த ஜனங்களின் போஜனத்துக்கு ஏற்ற அரிசியாகும். ஆனால் பாங்குநெல் அரிசியானது நீளமாயிருப்பதால், அதைக் குத்தி அரிசியாகும்போது மற்ற உருண்டை அரிசியுள்ள தினுசுகளில் உண்டாவதைப்பார்க்கிலும் அதிகமான குறுநொய் உண்டாகிறது. புழுங்கல்அரிசி குத்திச் சாப்பிடும் ஜனங்களுக்கோ இதனால் பாதகமில்லை, ஏனெனில் நெல்லைஅவித்துக் குத்தும்போது அரிசி அதிகமாய் உடைந்து குறு நொய்யாவதில்லை. கார் போகத்தில் சாதாரணமாய்ப் பயிரிடும் மற்ற தினுசுகளைப் பார்க்கிலும் இது மெத்த சிறந்தது. மேலும் அதில் கிடைக்கும் மேனியும் அதிகம். அது பக்கம்வைத்துக் கிளைத்து மூடுகட்டும் சுபாவம் அதிகமாயுள்ளது. ஒற்றைத் தனிமுதலாய் நட்டாலும் கலப்பாய் விதைத்தாலும் சிலாக்கியமான மாசூல்தரத்தக்கது. காரில் சாகுபடி செய்தால் இது விளைவாக 4 முதல் 4½ மாதம் வரை செல்லும். வடமலையாளம் ஜில்லாவில் முதல்போகம் நெல் சாதாரணமாய் செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் அறுவடையாகும். அங்கே இந்த தினுசு விளைவுக்குவர 5 மாதம் சென்றபோதிலும், விசேஷித்த பலனைக்கொடுக்கிறது. சம்பாசாகுபடி காலத்தில் (அதாவது திருநெல்வேலியில் பிசானம் மேல்கறையில் இரண்டாம்போகம்) இந்த தினுசு 4 முதல் 4½ மாதத்தில் விளைவுக்குவரும். இந்தக்காலத்தில் தண்ணீர்த்தட்டு சம்பவிக்கக்கூடிய இடங்களிலும், ஆறுமாதப்பயிருக்குத் தண்ணீர் இறைப்பதில் நேரிடும் செலவுமட்டுக்கு மிஞ்சினதாயிருக்கு மிடங்களிலும், இந்த தினுசுநெல் சாகுபடி செய்ய லாயக்குள்ளது. மற்ற சாதாரண தினுசு நெல்பயிரைவிட இந்த பாங்குநெல்பயிர், தண்ணீர்த்தட்டு அதிகமாய்த் தாங்குவதுமன்றி, அந்தக்காலத்துக்குத் தக்கபடி மற்ற தினுசுகளைப் பார்க்கிலும் சிலாக்கியமான மேனிதரும். ஆனால் பாய்ச்சல் ஆதாரங்களில் ஆறுமாத பயிருக்குப்போதுமான தண்ணீரிருக்கும் பக்ஷத்தில், இதைவிட சம்பாநெல்லையே பயிரிடுவது உசிதமாகும். சிறு பாத்திகளில் இந்த தினுசு நெல்லை சாகுபடிசெய்து கேள்வரகு பயிருக்குத் தண்ணீர் இறைப்பதுபோல் ஐந்துநாளைக் கொருதண்ணீர் இறைத்து கேள்வரகுப் பயிருக்குச் செய்வதுபோலவே பருவம்செய்து வந்ததில் சிலாக்கியமான மாசூல் கிடைத்தது. இதனாலே இந்தத் தினுசுக்கும் நன்செயில் சாகுபடியாகும் மற்ற தினுசுகளுக்கும் தண்ணீர்த் தட்டைத்தாங்கும். இயற்கையில் எவ்வளவு பேதமிருக்கிறதென்பது நன்றாய் வெளியாகும். ஜனவரி முதல் மேமீ வரையுள்ள வேனிற்காலத்தில் இது சாகுபடி செய்யத்தக்கதல்ல, ஏனென்றால் அம்மாதங்களில் சாகுபடி செய்தால் அது விளைவுக்குவர, ஜூன் ஜூலை மாதங்களில் சாகுபடிசெய்யும் பயிர் அருவடையாகும் காலம்வரை செல்லும்.

ஜெப்பான் தேசத்தில் வித்தியாப்பியாஸம்:—இவ்வுலகத்திலுள்ள எல்லா தேசங்களிலும் ஜெப்பான் தேசமானது வித்தியாப்பியாஸ விஷயத்தில் முதல் தரமானதென்கிற புகழ்பெற்றிருக்கிறது. கிடைத்தவரையிலுள்ள தேசவிருத்தாந்தத்தைப் பார்த்தால் ஒவ்வொரு கிராமத்திலும் சராசரி இரண்டு பள்ளிக்கூடங்களுண்டென்று தெரியவருகிறது. 1902-வருஷத்திய தேசவிருத்தாந்தப்படி 100-பையன்களில் 96-பையன்களுக்கும் 100-பெண்களில் 88-பெண்களுக்கும் எழுதப்படிக்கத் தெரியும். இரண்டையும் சேர்த்தால் பள்ளிக்கூடம் போகவேண்டியவயதுள்ள 100-பிள்ளைகளில் 91-பிள்ளைகளுக்கு எழுதப்படிக்கத் தெரியும். ஆனால் இந்தியாவிலோ மொத்தமாய் 10-பையன்களில் 1-பையனுக்கும் 144-பெண்களில் 1-பெண்ணுக்கும் எழுதப்படிக்கத் தெரிந்திருக்கிறது. ஐந்து கிராமங்களில் நாலு கிராமங்களில் பள்ளிக்கூடமே இல்லை. வித்தியாப்பியாஸ விஷயத்தில் இந்தியாவுக்கும் ஜெப்பானுக்குமுள்ள தாரதம்யம் எவ்வளவு தெளிவாய்க் காணப்படுகிறது.

ஜெப்பான் தேசத்து ஜனத்தொகை 46,000,000 அல்லது 47,000,000. பிரிடிஷ் இந்தியாவின் ஜனத்தொகையோ இதைப்போல் 5 மடங்கு கொண்டது. வித்தியாப்பியாஸத்துக்கு ஜெப்பானில்பொதுப்பணத்திலிருந்து £5,000,000 செலவிடுகிறார்கள். இந்தியாவிலோ £. 500,000 க்கு சற்று குறைவாய் செலவிடுகிறார்கள். ஜெப்பானின் செலவைப்போல இந்தியா செலவிடவேண்டுமானால் குறைந்தது £27,060,000 செலவிடவேண்டும். மேலும் பிரிடிஷ் இந்தியாவையும் மிகாடோவின் சிறிய ராஜ்யத்தையும் சேர்த்துப் பார்த்தால் இந்தியாவில் வித்தியாப்பியாசத்தைப் பற்றிய எல்லாவிஷயத்திலும் செலவிடுகிறதைக்காட்டிலுமதிகமாய் ஜெப்பானில் வித்தியாப்பியாசத்துக்காக வேண்டிய கட்டிடங்களில் மாத்திரம் செலவிடுகிறார்கள். வித்தியாப்பியாசத்திற்காக ஒவ்வொருவனுக்காக இவ்வுலகத்திலுள்ள சில தேசங்களில் பின்வருமாறு செலவிடுகிறார்கள்

| | £ | s. | d. |
|---|---|---|---|
| ஜர்மெனி ... ... | 5 | 7 | 2 |
| பிரான்ஸ் ... ... | 3 | 13 | 11 |
| இங்கிலாந்து ... ... | 3 | 0 | 0 |
| ஸ்பெயின் ... ... | 1 | 7 | 2 |
| இத்தலி ... ... | 1 | 1 | 11 |
| பரோடா ... ... | 0 | 7 | 0 |
| இந்தியா ... ... | 0 | 1 | 0 |